தா 9446

2/-

உ

சிவமயம்.

மேகதூதக்காரிகையுரை.

இது

சுன்னாகம்

சம்ஸ்கிருதகலாசாலைத் தமிழாசிரியர்

சி. கணேசையரவர்கள் இயற்றியது.

ஆங்கிலவியாக்கியக்குறிப்புக்களுடன்

யாழ்ப்பாணம், கொக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

1925.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

உ

சிவமயம்.

மேகதூதக்காரிகையுரை.

இது

சுன்னாகம் சம்ஸ்கிருதகலாசாலைத் தமிழாசிரியர்

சி. கணேசையரவர்கள் இயற்றியது.

ஆங்கிலவிளக்கக்குறிப்புக்களுடன்

யாழ்ப்பாணம், கொக்குவில்

டப்பிரகாசயந்திரசாலையில்

ச்சிடப்பட்டது.

உ

சிவமயம்.

முகவுரை.

அறிஞர்கள் நூல் செய்யுங்கால், அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கனுள், ஒன்றுபயப்பவும் செய்ப; எல்லாம்பயப்பவுஞ்செய்ப. இம்மேகதூதக்காரிகை யென்னும்நூல் இன்பமென்னும் ஒன்று பயப்பச்செய்ததேயாம். இந்நூல் முந்நூலுள் எந்நூலெனின் வழிநூலேயாம். எதன்வழியாக்கப்பட்டதெனின், கவிகளைச் சுவைபடச்செய்யும் காளிதாச மகாகவியினாலே வடமொழியிலே இயற்றப்பட்ட மேகசந்தேசமென்னும் நூலின்வழி யாக்கப்பட்டதேயாம். இது யாத்தற்கிடமாயது கட்டளைக்கலித்துறையாதலின் அப்பெயரை முதனூற்பெயரோடு தந்து மேகதூதக்காரிகை எனப்பெயரிடப்பட்டது. காரிகை=கட்டளைக்கலித்துறை. மேகதூதம்=மேகத்தைத் தூதாகவிடுத்தசரிதம். மேகத்தைத் தூதாகவிடுத்தசரிதமும், காளிதாசன்சரிதமும், இந்நூலாசிரியர் முகவுரையின் கணுரைத்திருக்கின்றாராதலின் யாங்கூறுதன் மிகையென்று விடுக்கின்றாம். ஆண்டு நோக்கியுணர்க.

இந்நூலாசிரியர், மேகத்தைத் தூதாகவிடுத்த சரிதத்தின்கட்கூறிய இயக்கன்சாபமெய்திய காரணத்தை, இதன் முதநூல் வியாக்கியானகாரர் சிலர் பிறவாறுமுரைப்ப. அவர் இயக்கன் நிதிக்காவலிற்றவறியதுபற்றிச் சாபமெய்தினானென்றும், சிவபூசைக்காக, முதனாளிலே பூவெடுத்துவைத்தமைபற்றிச் சாபமெய்தினானென்றுங் கூறுவர். அக்காரணவிரிவை அறிந்தார்வாய்க் கேட்டுணர்க.

இந்நூல், படிப்போர் எளிதாகப்பொருளுணர்ந்து கோடற்குரியசொற்களால் இயற்றப்பட்டுள்ளதாயினும், வடமொழியுணர்ச்சி யில்லாதோரால் எளிதிற் பொருளுணர்தற்கரியதெனக் கண்டு, வடமொழியிலுள்ள மேகசந்தேசத்தோடு பொருந்த வைத்து ஆராய்ந்து ஒருரையெழுதின், அவர் இதனை எளிதில் தெரிதல்கூடுமெனக்கருதி அவ்வாறே ஆராய்ந்து இதற்கு இப்பொழிப்புரையை எழுதினாம். வடமொழி ஆராய்ச்சிக்கு உதவியாளராகி உதவினவர்கள், வைதிகசைவப்பிராசீனபாடசாலைச் சம்ஸ்கிருதத் தலைமையாசிரியராகிய பிரமஸ்ரீ. வி. சிதம்பரசாஸ்திரிகளும், உபவித்தியாதரிசி ஸ்ரீமாந். சதாசிவஐயரவர்களுமே. ஐய

ரவர்கள் இவ்வுரையை முதனூலோடு ஒப்புநோக்கிச் சில திருத்தங்கள் செய்து உதவியதன்றி, இவ்வுரைக்கு வேண்டிய மலை, யாறு, நகரம் முதலியவற்றின் விளக்கக்குறிப்புக்களும் முகவுரையும் ஆங்கிலத்தில் எழுதி உதவினார்கள். அவ்விருவர் நன்றியும் என்றும் மறக்கற்பாலனவல்ல. இவ்வுரையின்கண் வேண்டிய இலக்கணக்குறிப்புக்களும் விரிவும் எழுதப்பட்டுள்ளன. எழுதப்பட்ட [illegible]கட் பிழைகள்பல நேர்ந்துள்ளன. அவற்றை அறிஞர்கள் திருத்திக் கொள்க.

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

[illegible]ன்றுகட்:
குரோதன ௵
மாசி ௴ [illegible]

இங்ஙனம்
சீ. கணேசையர்.

INTRODUCTION

Kalidasa is justly regarded as the greatest of Indian poets and dramatists. His works have been translated not only into many of the Vernacular languages of India, but also into Eng. German, French, Danish, Italian, Swedish etc. They are read in the original Sanscrit with greater critical acumen and their translations afford delight to a larger number of readers. It is no small honour to the poet that eminent orientalists like Sir Willliam Jones, Prof. Wilson, Prof. Lassen, Chery, Prof. M. Williams' Mons. Fauche and also Poet Goethe, Schegel and Alexander von Humboldt have assigned him a very high position amongst the glorious company of the "*Sons of Song*".

The personal history of the poet whose works command the esteem of the learned of all nations is almost a blank. No great reliance can be placed on the many popular legends current in the country concerning the poet. They have no historical value. His birth place still remains a mystery. Some Scholars conclude that it must be somewhere in Cashmere in the north while others locate it in the South (Rajputana). There is great uncertainty about the time he lived. The popular belief is that he lived in the time of king Vikramaditya who after defeating the Scythians (sakas) established the Sumvat Era which is said to have commenced 56 B. C. Various other dates like the second half of the 2nd Century, the fifth, the sixth, the seventh and the 11th centuries A. D. are mentioned as the age of the poet. It is even contended that *Kalidasa* is not the real name of the poet, but the surname assumed by him subsequent to his getting boons from the Goddess Kali.

Almost all the works of Kalidasa are widely read. Of all his poems Meghaduta is the best, just as the Sakun-

tala is the best of his dramas. The Meghaduta is purely a love-song. Mons. Fauche thinks "there is nothing so perfect in the elegiac literature of Europe as the Meghaduta of Kalidasa". That it is a favourite study of the Indian scholars (not to speak of the many European scholars) will appear from the fact that it has more than 20 commentaries and many glosses.

The subject of the poem is simple and ingenious:— "A yaksha a divinity of an inferior order, an attendant upon the god of riches, Kuvera, and one of a class which, as it appears from the poem, is characterised by a benevolent spirit, a gentle temper, and an affectionate disposition, has incurred the displeasure of his sovereign, and has been condemned by him to a twelvemonth's exile from his home. In the solitary but sacred forest in which he spends the period of his banishment, the Yaksha's most urgent care is to find an opportunity of conveying intelligence and consolation to his wife; and in the wilderness of his grief, he fancies that he discovers a friendly messenger in a cloud one of those noble masses which seem almost instinct with life as they traverse a tropical sky in the commencement of the monsoon, and move with slow and solemn progression from the equatorial ocean to the snows of the Himalayas. In the spirit of this bold but unnatural personification, the Yaksha addresses the cloud, and entrusts to it the message he yearns to despatch to the absent object of his attachment. He describes the direction in which the cloud is to travel— one marked out for it, indeed, by the eternal laws of nature; and takes this opportunity of alluding to the important scenes of Hindu mythology and tradition;— not with the dulness of prosaic detail, but with that true poetic pencil which, by a few happy touches, brings the subject of the description vividly before the mind's eye. Arrived at the end of the journey, the condition of his beloved wif is the theme of the exile's anticipations, and is dwelt upon with equal delicacy and truth; and the poem terminates with the message that is intended to assuage her grief and animate her hopes. The whole of this part of the

composition is distinguished by the graceful expression of natural and amiable feelings, and cannot fail to leave a favourable impression of the national character; whilst the merely descriptive portion introduces the student to a knowledge of a variety of objects of local, traditional, and mythological value with which it is his duty to become familiar." .... Prof. Wilson.

Meghaduta-Karikai is the name of the Tamil translation of this poem. It is so called because it narrates the story of a cloud being sent as a messenger and is composed in *Karikai* metre; known in Tamil as கட்டளைக்கலித்துறை. The translation has been effected with great care and skill retaining the spirit and beauties of the original and possessing all the grace and sweetness of Tamil diction, and thereby revealing the great ability of the translator as a poet and scholar.

The late Srimat A. Kumaraswamy Pulavar of Chunnakam, Jaffna, the author of this Tamil poem was born in 1854 and died in 1922. He contributed immensely to the furtherance of Tamil studies and its enrichment by bringing out revised and improved editions of many Tamil treatises, by original compositions, and by translations, critical notes and reviews. In addition to his great scholarship and poetic genius, he possessed to a remarkable degree the rare gift of keen critical acumen. He was widely known throughout Tamilakam.

உ

சிவமயம்.

மேகதூதக்காரிகையுரை.

காப்பு.

திருமேவு போசன் சவையிற் கவிஞர் சிகாமணியாய்
வருமேக வீரன் கவிகாளி தாசன் வகுத்துரைத்த
ஒருமேக தூதந் தமிழ்க்கவி யாக வுரைக்கவரந்
தருமேக தந்த விநாயகன் பாத சரோருகமே.

நூல்.

பூர்வமேகம்.

1. இயக்கன்வரலாறு.

பொன் - திரவியம். சீர் - புகழ். அளகா + ஈசன் = அளகேசன். குணசந்தி. புலர்ந்து ஒரு இயக்கன் எனப்பிரிக்க. கையகல ஒரு சொல். கைப்பிரிய என்பதுபோல. மின் - ஒளி. தென் - அழகு.

இ - ள். (எண்ணில்லாத) திரவியத்தைக்கொண்ட புகழையுடைய அளகாதிபதியாகிய குபேரன் (தன்னைச்) சபிக்க (அதனால் தன் மனம்) வாடி (அவன் ஏவற்காரனான) ஓரியக்கனானவன், தன்கட்பொருந்திய மேன்மையும தன்னை விட்டு நீங்கவும், தன்மனைவியும் தூரமாகவும் (தன் தேககாந்தியினாலே) மின்னலையொத்தசீதாதேவியும், ஸ்ரீராமபிரானும் வசித்தலை விரும்பிய சோலையையுடைய அழகைக்கொண்ட சித்திரகூடமலையைப்போய் அடைந்தான். எ - று.

தனதன் என்னும் பெயர்நோக்கிப் பொன்கொண்ட....அளகேசன் என்றும், ஈதலும் இசைபாடவாழுதலு மல்லது உயிர்க்கு வேறூதியமில்லை என்பதை யுணர்ந்து, தான்பொன்கொண்டதற்கேற்பக் கொடுத்துப்புகழ் பெற்றவன் என்பார் சீரளகேசன் என்றும், வனவாசஞ்செய்தகாலத்திலே சீதாதேவியும் ஸ்ரீராமபிரானும் மலையின் சிறப்புநோக்கி அங்குள்ள சோலையிலே சிறிதுகாலம் வசித்தமைபற்றி வாசம் விருப்பு பொழில் என்றும், கண்ணையும் மனத்தையுங் கவரத்தக்க பலவகையான சிறப்புக்களை

யுடையது அம்மலை என்பார் தென்கொண்டசித்திரகூடம் என்றுங்கூறி னார். சித்திரகூடமலையிலே ஸ்ரீராமனும் சீதையும் வசித்தமையையும், அதன் சிறப்புக்களையும், கம்பராமாயணத்துச் சித்திரகூடப்படலநோக்கியுணர்க. மின் சீதையின் மேனிக்குவமையாதலை, "பொன்சேர்மென்கால்" என்னும் இராமாயணச்செய்யுளில்வரும் "மின்சேவிக்க மின்னரசென்னும் பாடி நின் றாள்." என்னுமடியானுமுணர்க. மின் ஒளியுமாம். இயக்கன் புலர்ந்து சேர்ந்தான் என முடிக்க.

நீங்க, கையகல என்னுஞ் செயவெனெச்சங்கள் சேர்ந்தான் என்னும் வினைமுற்றோடு தனித்தனிமுடியும். உம்மைகளில் முன்னைய இரண்டும் எச்ச உம்மைகள்; பின்னைய இரண்டும் எண்ணும்மைகள். சபிக்க - சாபமிட. பெயரடியாகப்பிறந்த வினையெச்சம். விரும்புபொழில் - வினைத்தொகை.

2. மேகதரிசனம்.

தள்ளாடல் - அசைதல். அகன்று - கழித்து. தினம் - நாள்.

இ - ள். தன் மனைவி பிரிவால்வாடி வருத்தமுற்றுத் தன்மனநிலை தள்ளாடுகின்ற இயக்கனும் எட்டுமாதம் கழித்து, ஆடிமாதத்து முதலாநாளில் அம்மலைச்சாரலினூடே ஒருமேகத்தை உற்காதகேலி என்னும் விளையாட் டைச் செய்கின்ற யானையைப்போலக் கண்டான். எ - று.

உற்காதகேலி - மலைப்பக்கத்திலே யானை கொம்பினாலே குத்தி இடு றும் விளையாட்டு. இதனைச் சிந்தாமணிகாரர் கோட்டுமண்கொளல் என்பர். கொம்புக்கு மண்ணெடுத்தல் என்பது வழக்கு. மேகம் மலைச்சாரலிற் படிந்து கிடந்ததன்மை, யானை கோட்டுமண் கொண்டு நின்றது போன்றதாதலின் உற்காதகேலியுவாவெனவே என்றார். வாடிவருந்தித்தள்ளாடுமியக்கன் கண் டான் எனமுடிக்க.

உம்மை - இழிவுசிறப்பு. வாடி வருந்தி அகன்று என்பன செய்துஎன் னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள். தள்ளாடும் என்பது எதிர் காலப்பெயரெச்சம்.

3. மேகதரிசனத்தாற் சோகமுறல்.

அரனுடைத்தோழன் - குபேரன். பெயரெச்சவீறு தொக்குநின்றது. அநுசரன் - ஏவற்காரன். உரன் - வலி, போலி. பிறழுதல் - வேறுபடுதல்.

இ - ள். குபேரனுடைய ஏவற்காரனாகிய அவ்வியக்கன் மனவலியோ டும் அம்முகிலுக்கு முன்னே நின்று கண்ணீரையும் உள்ளே அடக்கிக் கொண்டு பிரிவில்லாதாருடைய மனமும் மேகவரவைக்கண்டு தன்நிலை குலையுமென்றால் பிரிந்தோருடைய மனம் எத்தன்மையதாகும் என்று (தன் மனத்தோடு) சொன்னான். எ - று.

கார்வரவைக்கண்டு பிரியாதோர்மனமே வேறுபடுமென்றால் பிரிந் தோர்மனம் வேறுபடுதலைச் சொல்லவேண்டாம் என்பான் யாதாகுமோ வென்றான். உம்மை - சிறப்பு. ஓ - அசைநிலை. வரல் - தொழிற்பெயர். உள்ளடக்கி என்றுபேசுவன் எனமுடிக்க. பேசுவன் - காலவழுவமைதி.

4. மேகத்தைத்தூதுபோக்கநினைத்தல்.

படர்தல் - வருதல். பிரியை - மனைவி. ப்ரியா என்னும் வடமொழி ஆவீறையு மென்றவிதிப்படி பிரியை எனத்திரிந்துநின்றது. ஏத்துதல் - துதித்தல்.

இ - ள். பின்வருகின்ற ஆவணிமாசத்து மேகத்தைக்கண்டு எனது மனைவியின் உயிர் என்ன துயரடையும். ஆகையால் அதற்குமுன் ஒரு தூதை அங்கேயனுப்புவேனென்று சிந்தித்துக்கொண்டு, மின்பரந்த அந்த மேகத்திற்கு மல்லிகைப்பூவை இட்டு விரும்பிப் பூசித்து, மகிழ்ச்சியோடு வந்தாயோ மேகமே! என்று துதித்தான். எ - று.

என்று கொண்டு இட்டு அர்ச்சித்து ஏத்தினன் என வினைமுடிக்க. என என்பது இடைப்பிறவரல். பிரிந்தவர்களுக்குக் கார்காலத்து மேகம் அதிகம் வருத்தஞ்செய்தல் இயல்பாதலின் என்னைப் பிரிந்திருக்கு மென் தலைவிக்கு மிது மிக்க துயரைச் செய்யுமென்பான் என்படுமோ என்றான் சுகசீவியாய் வந்தாயோ என அதன் நல்வரவை வினவினான் என்பார் இன்பொடுவந்தனையோ என்றான் என்றும், தன்னை அது முகங்கோடற் பொருட்டுப் பலவாறு புகழ்ந்தான் என்பார் ஏத்தினன் என்றுங் கூறி னார்.

படர் ஆவணி - வினைத்தொகை. ஓகாரங்களில் முன்னையது அசை, மற் றையது வினா. இன்பொடு வந்தனையோ என்பதில் ஒடு வேறுவினை யுட னிகழ்ச்சி.

5. காமுகர்க்குப்பகுத்தறிவின்மை.

புணர்ப்பு - கலப்பு. தரித்தல் - தங்குதல். பகுத்தறிதல் - பிரித்த றிதல்.

இ - ள். புகையும் நெருப்பும் நீரும் காற்றுமாகிய இவை நான்கும் சேர்ந்த கலப்பேயாகிய அதுவே மேகமென்று சொல்லப்பட்டது. சடமா கிய இது இவனுக்குத் தூதுசொல்லுதற்கு வல்ல இயல்பு உள்ளதோ? (கேட்கவும் காணவும் சொல்லவும்) இது செவி கண் வாயும் பிறவுமாகிய உறுப்புக்களைத் தாங்கியுள்ளதோ? இன்று. (அங்ஙனமாகவும் இவன் தூது சொல்லியனுப்புவதெப்படி?) பொருளிலேவைத்துப் பகுத்தறியுமியல்பு பகையான காமமுற்றார்க்கு உளதாகுமோ? ஆகாதென்றபடி. எ - று.

ஆல் - அசை. அறுவகைப்பகையுள் காமமும் ஒன்றாதலின் பகையுறு காமிகள் என்றார். பகுத்தறிதல் - சித்தோ அசித்தோ எனப் பகுத்தறிதல். ஏகாரம் - தேற்றம். ஓகாரங்கள் எதிர்மறை.

6. முகிலுக்கு உபசாரவார்த்தைகூறல்.

எய்தல் - இயைதல். குழல் - பெண்மயிர். பிரார்த்தனை - வேண்டுதல். சகம் - பூமி. புட்கலாவர்த்தம் - எழுமுகிலிலொன்று; அதுபொன் மழை பொழிவது.

இ - ள். முகிலே! யான் அகிற்புகை யூட்டப்பெற்ற கூந்தலை யுடையாளாகிய என் மனைவியென்னும் பெண்ணொருத்தியை நினைத்து மனம் சோருகின்றேன். சோருகின்ற எனக்கு (உன்பால்) வேண்டப்படுவது ஒன்று உண்டு. அதனை முடித்து வைப்பாய் உன்னை ஒன்று யான் இரந்து கேட்டலும் எனக்கு இகழ்ச்சிதராது. ஏனெனில்; நீயோ பூமியிலே உயர்ந்த புட்கலாவர்த்தமென்னும் மேகத்தின் ஒப்பற்ற மரபில் வந்து பிறந்துள்ளாய். ஆதலால். எ - று.

எனது என்பது உருபுமயக்கம். எனது பிரார்த்தனை யொன்று உன்னிடத்துண்டு எனினுமாம். இரப்பின் இளிவரவை யறிந்து உயர்ந்தோர் இரப்போருடைய இரப்பை விரைந்து முடித்து வைப்பாராதலின், உயர்மரபிற் பிறந்த உனக்கு அக்குண முண்டென்பான் உயர்புட்கலாவர்த்தத்தனிமரபிற் புகுவோய் என்றும், அக்குணமுடைய நீயும் என் இரப்பை விரைந்து முடித்துவைப்பாயாதலின் உன்னிடத்தில் யாசித்தல் இகழ்ச்சியாகா தென்பான் புகழ்தருமே என்றுங் கூறினான். உயர்ந்தோரிடத்து இரத்தல் இளிவரவாகா தென்பதைக் "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின் - றிரப்புமோரேருடைத்து" என்னுந் தேவர்வாக்கானு முணர்க.

உம்மை இழிவு சிறப்பு. புகுவோய் - காலமயக்கம்.

7. தூது வேண்டுதல்.

சந்தாபம் - மிகுவெப்பம். கொதிப்பு - கோபம். கோபத்தாற் கூறிய சாபத்திற்கானமையின் ஆகுபெயர். சந்தேசம் - தூது.

இ - ள். வெவ்விய அக்கினியின் மிகுவெப்பத்தை யடைந்தவர்களுக்கு (அவ்வெப்பத்தைத் தணித்து குளிர்ச்சியைத் தருதலின்) இன்பந்தருமேகமே! மந்தார விருட்சங்கள் பொருந்திய சோலைசூழ்ந்த அளகா புரத்துக்கரசனாகிய குபேரன் தன்மனக் கோபத்தாற் சொன்ன சாபத்தினால் இங்கே வந்தவனாகிய எனக்குத் தூதாகி யான்சொல்லுகின்ற வார்த்தையை என்னைப் பிரிந்திருக்கின்றவளாகிய என்மனைவிக்குச் சொல்லி அவள் துயரைத் தணிப்பாய். எ - று.

தருமென்பது இடவழுவமைதி. வந்தேன் வினையாலணையும் பெயர். சோலை காரணமாகவே தனக்குச் சாபங்கிடைத்த தென்பது தோன்ற மந்தாரமேவும் பொழிலளகேசன் என்றான்.

8 தூதுபோகவேண்டுமிடம்.

மனையாட்டி - மனைவி. மின் - ஒளி. இருநிதி - சங்கநிதி பதுமநிதி. பொன் - அழகு.

இ - ள். மேகமே! என் மனைவி இருக்குமிடம் யாதென்று வினவுவாயெனின், அதனையான் சொல்லக்கேள். அவளிருக்கிற இடம் ஒளி பொலிகின்ற இருநிதிக்குத் தலைவனாகிய குபேரன் வீற்றிருக்கின்ற அழகு நிறைந்த மாடங்கள் பொலிகின்ற அளகாபுரமென்று நல்ல மனத்திற் கொண்டு அங்கே செல்லுதற்கு விரும்புவாய் எ - று.

மனையாட்டி மனையை ஆள்பவள். பரோபகார சிந்தை என்பதுதோன்ற நன்மனம் என்றான். என்மனைவியிருக்கு மிடமோ அளகாபுரம்; அது விருந்தாகச் செல்லும் நீயும் சுகமாகவசித்தற்கு உரிய இடம் என்பது தோன்றப் பொன் மலிமாடம்பொலியும் அளகை என்றான். பொன் மலிமாடம் என்பதற்குச் செல்வமிக்க மாடமெனினு மமையும். வீற்றிருக்கும் அளகாபுரம் எனக்கூட்டுக. செல்ல - செயவெனெச்சம்; காரியப்பொருட்டு. அளகைப்புரம் பண்புத்தொகை.

9. தூதுபோகும் பாதையிற் காணுமகளிர்.

கார் - கார்காலம். தார் - மாலை. மலர்ந்து - மகிழ்ந்து. பயோதரம் - மேகம். பய + உதரம் = பயோதரம். வடமொழிச் சந்தி.

இ - ள். மேகமே! கார் காலம் வரும்போது தம்மைப் பிரிந்து நெடுந்தூரஞ்சென்ற தங்கணவரோடும் அவர் தேர் வருமென்று வரவுபார்த்திருந்த சிலபெண்கள் மாலைபொருந்திய கூந்தலைத் தங்கையாற்பிடித்துக் கொண்டு தந்தலையை நிமிர்த்தி தம்பார்வையை வீசி மகிழ்ந்து உன்னைப்பார்ப்பார்கள். எ - று.

நெடுந்தூரம்போதல் - காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதல். வழி - ஆகுபெயர். தம் நாயகரைப்பிரிந்த வருத்தங்காரணமாக அமளியிற்கிடந்து புரண்டமையிலே அவர்கூந்தல் குலைந்துகிடந்தது என்பது தோன்றக் கூந்தலைக் கையாற்பிடித்து என்றும், வருத்தமிகுதியாற் சரீர மெலிந்தமையினாலே எழமுடியாது தலையைத்தூக்கிப்பார்ப்பார் என்பான் தலை நிமிர்த்துஎன்றும் தூரத்திற்செல்லும்போதே நன்கு நோக்குவார்என்பதுதோன்றமலர்ந்துஉன்னைப்பார்ப்பர்என்றுங்கூறினான். தார்வருகூந்தல் என்பதற்கு, மாலை அழகுவளர்தற்குக் காரணமாகிய கூந்தல்எனினுமாம். பெண்கள் பார்க்கும்போது வீசிப்பார்த்தல்இயல்பு ஆதலின் எறிந்து என்றனெனினுமமையும்.

10. பயண சோபன சகுனம்.

அநுகூலம் - காரிய சித்தி. பாகு - வெல்லப்பாகு. பகம் - கொக்கு. சோபனம் - நன்மை. சாதகம் - வானம்பாடிப்புள்.

இ - ள். கரியமேகமே வருகுதி! பார்! உனக்குப் பின்புறமாக காரியசித்தியைக் காட்டுகின்ற வாயுவும் வந்து ஏகுதி என்று சொல்லி மெல்ல மெல்லத் தள்ளுகின்றது. (நன்னிமித்தமாக) இடப்புறத்திலிருந்து பாகு போன்ற இனிய இசையைச் சாதகப்பறவை பாடுகின்றது. கொக்குப்பறவையும் உன்னைத் தொடர்ந்து வருகின்றது. ஆகையால் உனது பயணமும் நன்மையைத் தருவதாயது. எ - று.

வாகு ஆர் எனப்பிரித்து வெற்றிபொருந்திய மேகமே! எனினுமாம். ஒருவர் பிரயாணஞ் செய்யும் போது காற்று அவர் பின்புறமாக வந்துதள்ளுமாயின் அது சோபனமாகு மென்பது பற்றி அநுகூலவாயுவும் வந்துபின்பால்ஏகாயெனச் சொலி மென்மெலத் தள்ளும் என்றான். இவ்வாறே "கூர்ங்கொளிர் நளினவான் கொட்டைக் கட்டினை—யீர்ந்திணரேந்திவந்திறைக்குந்தென்றல்பி—னார்ந்தனுகூலமே செய்ய" என்றார் இரகுவம்மிசகாரரும்.

ஆகா என்பது ஆச்சரியத்தைக் குறிக்கு மோரிடைச் சொல். வந்துஎன்னும்வினையெச்சம் தள்ளும் என்னும் வினைமுற்றோடுமுடியும்.

11. விரைந்துபோகவேண்டுமெனல்.

மதித்தல் - நினைத்தல். பதிவிரதம் - கற்பு. பருவரல் - துன்பம்; "பருவந்துபாழ்படுதலின்று." என்பதிற்போல.

இ - ள். ஒருவருடத்தோடு சாபமுடிந்துபோக, என் உயிர்த்துணைவரானவர் வருவரென்று நினைத்துக் கழிந்த நாளொழியக் கழியாதநாளை இத்துணையென எண்ணிக் கொண்டு உயிர்வாழ்ந்திருக்கும் திருமகளை ஒத்தவளும் கற்பிற்சிறந்தவளுமாகிய (என்) மனையாளை (ப்பிரிவாலாய) அவள் துயரம் நீங்குமாறு விரைவிற்சென்று காணுதி. எ - று.

இன் உருபு ஏதுப்பொருட்டு. நீங்கக்காண்டி என இயையும். காண்டி முன்னிலைவினைமுற்று. காண் - பகுதி. இ - விகுதி, டகரம் எழுத்துப்பேறு. வந்தஐயுருபு காண்டி என்னும் பயனிலைகொண்டு முடிந்தது.

12. வழித்துணைகூறல்.

உருமேறு - இடியேறு. போது ஆர் அ மானசவாவி எனப்பிரிக்க. பாதேயம் - வழியுணவு.

இ - ள். நீரையுடைய மேகமே! தாமரைப்பூக்கள் நிறைந்த அந்த மானசவாவியிலுள்ள அன்னங்கள் வழியிலே உனது இடிஒலியைச்செவியாரக்கேட்டு (தாமிருக்கின்ற குளங்களிலிருந்து) பூமுதலாகிய வழியுணவுங்கொண்டு உனக்குத்துணையாகி உமைபாகராகிய சிவபெருமான் வீற்றிருக்கும திருக்கயிலாசமலைவரையும் பரந்துவரும். எ - று.

மானசவாவியிலிருந்து பனிக்குப்பயந்து வேறுவாவிகளிற் போயிருந்த அன்னங்கள் மழைக்காலத்திலே பின் அம்மானசவாவிக்குப்போதலின் திருக்

கயிலாயமலை மட்டும் என்றான். கேட்டு வரும்என முடிக்க. மானசவாவி - இமயமலைக்கும் திருக்கயிலாசத்திற்கும் இடையேயுள்ளதொரு வாவி.

13. பழைய நண்பனுக்குப் பயணஞ் சொல்லல்.

அழுத்துதல் - பதியச்செய்தல். வேது - வெப்பம்.

இ - ள். விண்ணில் வசிக்கும் மேகமே! தன்மனைவியாகிய சீதை பின்தொடர்ந்துவரக் காடே தமக்கு வாசத்தானமாகக் கொண்டு சென்ற ஸ்ரீராமன் தன் பாதங்களைப் பதியச்செய்த சித்திரகூடமென்னு முனது பழைய நண்பனை, நீ விடைதரல்வேண்டுமென்று கேள். அப்போது அது உன்பிரிவால் வெம்மைபொருந்திய நீரை விட்டு தனது நண்பையுங் காட்டும். எ - று.

பலதரம் மிதித்து நடந்தமைபற்றி அழுத்திய எனப்பட்டது. அழுத்திய என்பது மெலிந்துநின்றதெனக்கொண்டு இராமனுடைய பாதம் பதிந்த எனினுமாம். பிரிவால் விடப்பட்ட சோகபாஷ்பமாதலின் வேதுறு நீர் என்றும், தமது அத்தியந்த நண்பர் பிரியுங்காலத்து அவரோடு நண்புபூண்டார் அவர் பிரிவாலாய வருத்தமிகுதியால் கண்ணீர் விடுவாராதலின் வேதுறு நீர் விட்டு என்றும், அதனால் அவர் நண்பு புலப்படுமென்பான் நட்பும் வெளிவிடும் என்றுங் கூறினான்.

14. என்னிடம் வழியும் வார்த்தையுங் கேளெனல்.

இளைப்பு - மெலிவு.

இ - ள். நெருங்கிய மேகமே! உனக்கு அநுகூலமுறத்தக்க வழிகளியாவற்றையும் என்னிடம் அன்பாகக்கேட்டு அதன்பின் தமியேன் சொல்லுகிற பெறுதற்கரிய அமிர்தம் போலும் இன்பத்தைத்தருகின்ற வார்த்தைகளையுங் கேட்டு வழிக்கொண்டுசென்று, இளைப்புவந்தால் முன்பாகப்பொருந்திய மலையிலே தங்கி (அங்கேயுள்ள) நீரை (விடாய்தீர) உண்டு செல்லுதி. எ - று.

சொல்லுமென்னும் பெயரெச்சம் சொலும் எனத் தொக்குநின்றது. அது வார்த்தையென்னும் செயப்படுபொருட் பெயர்கொண்டு முடிந்தது. கேட்டு கேட்டு வழிக்கொண்டு தங்கி உண்டு போகுதி என வினைமுடிக்க.

15. ஒருப்பாடு கூறல்.

மண்டி - நெருங்கி.

இ - ள். கரியமேகமே! மிக்கதிறலையுடைய காற்றும், சித்திரகூடமலையின் சிகரமாகிய உச்சியைப் பிடுங்கிக்கொண்டு எழுகின்றது. இஃதென்ன அதிசயமென்று சித்தகுலப்பெண்கள் மேலே பார்த்துத் தம் மனமஞ்சவும், திக்குயானைகளும் தங் கருவநீங்கவும், ஆகாயத்தில் நெருங்கி உயர்ந்து வடதிசையைநோக்கிச் செல்லுதி. எ - று.

மேகமே! நீ செல்லும்படி சித்திரகூடமலையிலிருந்து மேலெழும்போது நீ எழுகின்ற ஒலியைக்கேட்ட சித்தர்குலப் பெண்கள் காற்றானது சித்திரகூடமலைசசிகரத்தை முரித்துக்கொண்டு மேலெழுகின்றது போலுமென்று மேலே நிமிர்ந்துபார்த்து மனமஞ்சுவர் என்பான், திண்டிறல்வாயுவும்...கண்டுளமஞ்ச என்றும், திக்குயானைகள் உன்னை ஒரு களிற்றுயானையென்று நினைத்துக் கருவத்தோடு உன்மீது கையைவீசும், அதற்கு நீ தப்பிச்செல், அதனால் அது கருவம் நீங்கும் என்பான் திசையானை மேன்மையுங் கையகல என்றுங் கூறினான். கையகல - ஒருசொல். கைப்பிரியஎன்பதுபோல.

16. இந்திரதனுக் கண்டம்.

பூருவம் - கிழக்கு. வன்மீகம் - புற்று. தனுக்கண்டம் - விற்கண்டம். மஞ்ஞை - மயில்.

இ - ள். கிழக்குத்திக்கிலே புற்றினுச்சியின்கண் இந்திரனுலடைவதான விற்கண்டந் தோன்றுகின்றது. அதன்மேல் உன்மேனி பொருந்த (அப்போது) ஒன்றுசேர்ந்த மயிலினிறகுகளை அணிந்த கிருஷ்ணனது திருவுருவத்தைப்போலப் பூமியிலே மிகுந்த ஒளியையும் பெறுகுவாய். எ - று

ஏ முகிலே! கிழக்குத்திக்கிலே புற்றினுச்சியின்கண் இந்திரதனுவின் கண்டந் தோன்றுகின்றது; அதன்மீது நீ செல்லும்போது அதில் உன் மேனிதீண்டலால் நீ அதன் மிக்க ஒளியைப் பெறுகுவை; அப்போது மயிலிறகையணிந்து விளையாடிய கிருஷ்ணனது வடிவம்போலத் தோன்றுவை என்பது கருத்து. பலநிறஒளியையுடைய இந்திரதனுக்கண்டத்துக்கும் பல நிறமாய்த் தோன்றுகின்ற மயிலினிறகுகளுக்கும், கண்ணனுருவம் மேகத்திற்கும் உவமை ஆதலின் இது நிறம்பற்றிவந்த உவமையணி. பெறுவை - முன்னிலைவினைமுற்று. கண்டம் - துண்டம்.

17. மருத நிலப்பெண்கள்.

வேட்கை - விருப்பம். கிளருதல் - எழுதல்.

இ - ள். உயர்ந்த மேகமே! கேட்குதி! வேளாளர் அடையும் பேறுகளெல்லாம் உன்னிடத் துள்ளன வென்று விருப்பமிக்கு வாள் போன்ற நெடியகண்களையுடைய உழத்தியர்கள் உன்னைப் பார்க்க, மாலமென்று சொல்லப்படும் பயனிறைந்த வயலின் கண் மழையையுஞ் சொரிந்து முன் சிறிதுமேற்காய்ச்சென்று பின் வடக்கில் எழுந்து செல்வாய் - எ - று.

உழவர் ஏரானுழுது பயன் பெறுதற்கு மழை யென்னும் வாரிவளமே காரணமாதலின் வேளாளர் பேறுகள் உன்பாலன என்று .. நோக்க என்றான். உம்மை - சிறப்பு. பார்த்திடப் பொழிந்து ஆய்க்கிளருவை எனமுடிக்க. கோள் - கொள்ளப்படுவது = பயன். ஆய் - இறந்தகால வினையெச்சம். கிளருவை முன்னிலையேவல் வினைமுற்று.

18. ஆமிரகூடமலை.

தூப்பு - கலி. சோர்வு - இளைப்பு.

இ - ள். அழகிய மேகமே! அப்பால் வருகின்ற ஆமிரகூடம் என்னும் அகன்ற மலையும், தன்னை வெப்பத்தால் வருத்திய காட்டழலை நீ விடாமழையின் வலியினாலே நீக்கிய உபகாரத்தை எண்ணி உன்னைச் சுமக்கும். அப்போது வழிநடந்த இளைப்பும் உன்னை அகலும். எ - று.

செய்ந்நன்றி கொன்றார்க்குய்வில்லை என்று கருதித், தன்வெப்பம் போக்கிய உன்னைத் தானும் சுமந்து வழியிளைப்பை நீக்கும் என்பான் வெப்பான் வருந்திய ... செய்ந்நன்றி யெண்ணிச் சுமக்கும் நின்னை என்றான். சுமக்கு நின்னை என்றது தற்குறிப்பேற்றம் என்னு மணி.

19. ஆமிரகூடமலையிலிருத்தல்.

உரு - வடிவு. நிலமான் - பூமிதேவி.

இ - ள். கரியமேனியைக் கொண்ட மேகமே! இன்சுவையையுடைய மாங்கனி முதலாகிய பொருள்கள் பொருந்திய ஆமிர கூடமலையின் நடுவிடத்தே சென்றிருக்க உன்வடிவு அதன்மேற் பொருந்தும்பொழுது தேவர்களும் தெய்வப் பெண்களும் உயர்ந்த மலையைப் பெரிய பூமிதேவியின் கருங்கண்ணையுடைய முலையென்று நினைப்பார்கள். எ - று.

மேகமே! நீ ஆமிர கூடமலையின் சிகரத்திற் போயிருக்கும்போது, உன்னை மேற்கொண்ட அம்மலையின் றோற்றம் தேவர்களுக்கும் அரம்பையர்களுக்கும் பூமிதேவியின் ஒருமுலைபோலத் தோன்றும் என்பது கருத்து. மலை முலைக்கும் மேகம் அதன் கரிய கண்ணுக்கும் உவமை என்க. கருங்கண் - கரிய முலைக்கண். வேளையில் எண்ணுவரென இயையும். புக்கு என்னும் வினையெச்சம் பகுதி யிரட்டி இறந்த காலங் காட்டி வந்தது.

20. ஆமிர கூடத்து வேட்டுவப் பெண்கள்.

குன்மலதை - உம்மைத்தொகை. குன்மம் - பற்றை. லதை - கொடி. லதா என்னும் வடமொழி லதை எனத் திரிந்து வந்தது.

இ - ள். மேகமே! அம்மலையின்மேற் சிலகணப்பொழுது தங்கி, அதற்குப்பக்கத்தே பற்றைகளுக்குள்ளும் கொடிகளுக்குள்ளும் வேட்டுவப்பெண்கள் வாழ்ந்திருத்தலையுங்கண்டு, விரைவாகச்செல்லுதி; செல்லும்போது விந்தியமலைச்சாரலிலே பொருந்திவிழுகின்ற நருமதையென்று சொல்லும் நதிவந்து எதிர்ப்படும். எ - று.

கண்டு - காண் என்னும் பகுதியடியாகப்பிறந்த வினையெச்சம். ஏகுதி - முன்னிலை ஏவல்வினைமுற்று. நண்ணிடும் என்பதில் இடு பகுதிப் பொருள் விகுதி.

21. நருமதையாறு.

இ - ள். தண்ணியமேகமே! காட்டிலுள்ள யானைகளின் மதமணம் நிறையப்பெற்று அதனோடுகலந்து எதிரிற் பொருந்திய நாவலாகிய மரச்செடிகள் தாக்க அதனாற் சிறிதுதாமதித்துவருகின்ற நருமதையாற்றினது நல்லநீரை யுண்டுசெல்லுவாய். சாரமடையப்பெற்றவர் எத்துணைவலியினர்க்கும் அசையமாட்டார்கள். எ - று.

சாரம் - பெலம். சாரமடைந்தவர் யார்க்குமசைகிலர் என்பது சரீர வலியுடையோர் எவர்க்குமசையாரெனவும், நீராகிய பெலத்தையடைந்தோரெவர்க்கு மசையார் எனவும் பொருள்பட்டுச் சிலேடையோடுகூடிய வேற்றுப்பொருள்வைப்பு என்னுமணியாய் நின்றது. அளைந்து தடைபொருந்திச் சேருறும் நர்மதை எனமுடிக்க.

22. தடைதாமதம்.

சுவாகதம் - நல்வரவு.

இ - ள். விவாகஞ்செய்யப்பட்ட முறையினையுடைய எனது பெண்ணுக்கு (மனைவிக்கு) ஆதாகவிரைந்து செல்ல விரும்புவாயாயினும் ஆயிரங் கண்களாற்பார்த்து அரியவழியிலே நல்வரவுகேட்டு மகிழ்ச்சியினாற் கண்ணீர் சொரிந்து உன்னைத் தொடருகின்ற மயில்கள் நீங்காத விந்தமலையைச்சார அங்கே தடைதாமதங்களும் அடையும். எ - று.

தடைதாமதம் - உம்மைத்தொகை. ஆயினும் சார்ந்திடும் எனவும் சாரச் சார்ந்திடுமெனவும் கூட்டுக. தவாத - தவா எனக் குறைந்துநின்றது. சார நிகழ்காலம்.

23. விதிசை நகரம்.

விதிசை - ஓர்நகரம். தரியாது + அன்று. கோங்கு + ஆரும். குடம்பை - கூடு. "குடம்பை தனித்தொழிய" என்றார் தேவரும். வாசம் - வசிக்குமிடம்.

இ - ள். மேகமே! அம்மலையிலே தங்காதுசென்று விதிசையை யடை குவையேல் பூக்களை மலருகின்ற வெண்மையாகிய தாழைச்சோலையையுங் காணுவாய். அன்றியும் மிகக்கறுத்த மணமார்ந்த நாவற் கனிகளையுங் காண்பாய். கூடுகளிலே பசிய காகங்கள் வாசஞ் செய்கின்ற மரங்களையுங் காண்பாய். எ - று.

வெண்கேதகை எனச் சினையடை யொற்றுமை பற்றி முதற்காயிற்று. அணுகுவையேல் சோலையுங் காண்பை, கனிகளுங் காண்பை, காகங்களுங் காண்பை எனமுடிக்க. இது அந்நிலவியற்கை கூறுதலின் தன்மையணி.

24. வேத்திரவதிநதி.

மதுரதரம் - மிக்கமதுரம். மந்ததரம்போல. சொல் - கீர்த்தி.

இ - ள். கீர்த்தியையுடைய மேகமே! அந்தவிதிசை நகரியின்கண் உனது விருப்பம் முற்றுமபடி சிந்துகின்ற திரையையுடைய வேத்திரவதி யென்னும் ஆற்றின் கரையை யடைந்து அதன்கண் பொருந்திய மிக்க மதுரத்தையுடைய நீரை விரும்பியவளவும் உண்டு அழகிய நீசைமலையிலே யிருந்து ஆறுதி. எ - று.

ஆசை - இளைப்புத்தீர்ந்து இன்பம் பெறும் ஆசை. முற்றச்சேர்ந்து உண்டு ஆறுதி எனமுடிக்க. அதன்வாய் என்பது அதன் அதரபானம் எனவும் பொருள் பட்டு உனது ஆசைமுற்ற அந்நதியாகிய பெண்ணின் அதரபானத்தையுண்டு எனவும் ஒரு பொருள் தோன்ற நின்றது.

25. நீசைமலை.

மீறுதல் - கடத்தல். முரஞ்சு - பூழை. வெண்முகையின் முல்லைக்கும் எனமாற்றுக.

இ - ள். கற்பினைக் கடக்கின்ற பெண்களை ஆடவர்கள் கண்டு புணருகின்ற பூழைகள் நிறைந்த அம்மலையின் பக்கத்தே பலபுறங்களுக்கும் வெண் முகைகளையுடைய முல்லைச் செடிகளுக்கும் நல்ல புதிய நீரைப் பெய்து அவற்றின் பூக்களைக் கொய்கின்ற பெண்களது முகத்திலே அற்பநிழல் (நீ அங்கே தங்கினால்) உண்டாம். (ஆகையால்) அங்கே சிறிதுதங்கி அப்பாற் செல்லுதி. எ - று.

புல் - புறக்காழான மரங்கள். "புறக்காழெல்லாம் புல்லெனப்படுமே". அவை ஈண்டுப் பூமரங்கள். நீர்விட்டு அலர் கொய்யும்போது அவர்கள் வெய்யிலாலடையும் வருத்தம் பெரிதாகலின், அதற்குச்சிறிது இரங்கி நின்று அவ்வருத்தந்தீர நிழல் செய்குதி என்பான் அற்பநிழல் வருஞ் சற்றவண்டங்கியகல் என்றான். அகல்வாய் என்னும் முன்னிலை வினைமுற்று ஆய்விகுதி குன்றி அகல் எனமுதனிலை மாத்திரையாய் நின்றது.

26. அவந்தி நகரவழி.

மார்க்கம் - வழி. சேண் - தூரம்.

இ - ள். செழியமேகமே! யாவர்க்குந் தெரிந்ததாயுள்ள அவந்திநகரை அடைகின்றவழி சிறிது வளைந்துள்ளது. ஆயினும் அங்குள்ள மாடநிரைகள் (வழிசெல்வோர்) பார்க்கும் பொழுது தூரத்தே நின்று (இங்கே வாருங்கள் இதுவே அவந்திநகர் என்று) அழையாநிற்கும். (அன்றியும்) அந்நகரிலுள்ள பெண்கள் சிறந்த கண்களுக்குத்தாமே விருந்தென்று எதிர்ப்படுவர். எ - று.

அவந்திநகருக்குச் செல்லும்வழி வளைந்துளதாயினும் அங்கு உயர்ந்து தெரிகின்ற மாடங்களை நேர்வைத்துச் சென்றடையலாம், அன்றியும் அந்நகரப்பெண்களும் வழியிலே எதிர்ப்படுவர்; அவரைக்கேட்டு மடையலாம் என்பது கருத்து. அழைக்கும் என்றது இலக்கணையோடு உயர்வு நவிற்சியுமாய் நின்றது.

27. நிர்விந்தியாநதி.

மாலை - வரிசை. ஓதிமம் - அன்னம். மேகலை - எழுகோவைமணி. உடுத்தல் - கட்டுதல். குந்தளம் - கூந்தல்.

இ - ள். விண்ணில் வசிக்கும் மேகமே! அந்த அவந்தி நகரவழியிலே திரை கரைசாரவந்து அசைதலால் ஒலிக்கப்பெற்று நல்ல வரிசையாக அடைகின்ற அன்னங்களாகிய மேகலாபரணத்தை நன்கு கட்டி நெய்பூசிய பாசியாகிய கூந்தலையும் வீசுகின்ற நிர்விந்தியா என்னும் மெய்ம்மையாகிய நல்ல நதியிலே இறங்கி நன்கு ஆடுதி. எ - று.

மெய் - உண்மை. ஆடினோர்க்கு உடனே பயன்கொடுக்கும் உண்மை. குந்தளபாசி - பாசியாகிய குந்தளம் எனமாறும். இது நிர்விந்தியா நதியைப் பெண்ணாக உருவகியாமையால் அவயவ உருவகம்.

28. பிரிவாற்றாது சரீரமெலிந்தெதிர்பார்த்தல்.

அகலல் - பிரிதல். படுதல் - பொருந்தல். வெளுப்பு - வெண்மை.

இ - ள். உயர்ந்த மேகமே! அந்த நிர்விந்தியா நதியும் நெடுநாளாகத் தன்னைவிட்டுப் பிரிந்த உன்னையே நினைந்து நினைந்து தன்னிடத்தே பொருந்திய நீரும்வற்றி, கரைகளிற் பொருந்திய மரநிரைகள் பக்கத்தே உதிர்த்துவிட்ட காய்ந்த சருகுகளைப் பொருந்தி அதனால் வெளுப்பு நிறமுங்கொண்டு நீ எப்போது வருவாய் என்று வழிபாரா நிற்கும். எ - று.

படுநீர் குறைந்து என்பது சரீரம் மெலிந்து என்பதுபோதரா நின்றது. நாயகரைப் பிரிந்த மகளிர் தம்மை நெடுங்காட்பிரிந்த நாயகரை நினைந்து நினைந்து சரீரமெலிந்து வெளுப்புற்று தம்நாயகர் எப்போது வருவார் என வழிபார்ப்பர்; அதனை இந்நதிக்குமேற்றி ஆசிரியர் கூறலின் இது தற்குறிப்பேற்றம் என்னுமணி. உதிர்த்துவிடும் - ஒருசொல். கொண்டு கொடு எனத் தொக்கு நின்றது. குறைந்து கொடு பார்க்கும் எனமுடிக்க.

29 அவந்தி நகரம்.

புலவர் - தேவர். அமராவதி - தேவநகரம். புட்பகரண்டினி - குடலையிற்போலப் பூக்கணிறைந்த சோலையையுடையது.

இ - ள் மேகமே! (பூமியிலே) வேள்விமுதலிய புண்ணியங்களைச் செய்து (அதன்பயனாலே தேவர்களாகித்) தன்னிடத்து வந்த அத்தேவர்களோடும் மண்ணுலகத்தில்வந்த அமராவதி என்னும் பெயரையுடைய தேவருலகமே இதுவாகும் பிறிதல்ல என்று எண்ணப்பெற்று விசாலையும், அவந்தியும், உஞ்சையும்என்றுசொல்லும் பெயர்களைப் பொருந்திய புட்பகரண்டினியை நோக்கிச்செல்லுதி. எ - று.

மற்று பிறிதென்னும் பொருளில்வந்தது. எண்ணிஎன்பது செயப்பாட்டுவினையெச்சம். எண்ணி நண்ணிய புட்பகரண்டினி எனமுடிக்க. நண்ணிய இறந்தகாலப் பெயரெச்சம்.

30. அவந்திநகர வயோதிகர்.

ஆவந்திகன் - அவந்திதேசவரசன். வற்சன் - உதயணன். பாவம் - வரலாறு.

இ - ள். நீரைக்கொள்ளும் மேகமே! அவந்திதேசவரசன் மகளானவாசவதத்தை என்பாளை அக்காலத்திலே உதயணன் என்பான் அவன்பூமியிலே வந்து பின்களவாக உபாயத்தினாற் கவர்ந்த பழங்கதையினது வரலாற்றைத் தெரிந்து நரையும்மிக்குப் பழியுமநீங்கிக் கோவமுமடங்கிய முதியோர்களும் அங்கேயுள்ளார். எ - று.

வாசவதத்தையை வற்சன்கவர்ந்த சரிதமாவது:—தந்தையாகியபிரத்தியோதன் வாசவதத்தையைச் சஞ்சயராசனுக்கு விவாகஞ்செய்ய நிச்சயித்திருக்கும்போது இவள் வற்சராசனுடைய உருவத்தைக் கனவிற்கண்டு அவன்மேலே மோகமுற்றுத் தன்கருத்தை அவனுக்குத்தெரிவிக்க வற்சன் இவள் பிதாமுதலியோருக்குத் தெரியாமல் இவளைக் கவர்ந்தான் என்பது. இது இப்படி 'மாலதீமாதவம்' என்னும் நாடகத்திற் சொல்லப்பட்டுளது. இச்சரிதம் தமிழ் உதயணன்கதையில் விரிவாகக் கூறப்பட்டுளது. ஆங்குநோக்கியுணர்க.

நரைமிக்கு மிகுந்து தொலைந்து தணிந்த முதியோர் என இயைக்க. மிகுந்து தொலைந்து தணிந்த என்பன செயப்பாட்டுவினைகள்.

31. உபசரித்தெதிர்கொள்ளல்.

வைகறை - விடியற்காலம். சாரசம் - நாரைப்பறவை. பரிமளம் - மிகுமணம். தொனி - சத்தம்.

இ - ள் மேகமே! வருகுதி. (யான்சொல்லுவதைக்கேள்), அவந்திநகரில்விடியற்காலத்தில்சிறப்புப்பொருந்திய நாரைகளின்நல்லதொனியைக் கேட்டுச்சிறிதுதாமதித்து நீ நிற்க, அப்பொழுதுநீரில் நிறைந்துள்ள தாமரைமலர்களின்மிகுமணத்தையுடைய பெரியநிர்விந்தியாநதியின் நீரைப்பரிசித்துஎதிர்வருகின்ற காற்றும் உனது மேனியைத்தீண்டி மனநிறைவைச் செய்யும். எ - று.

அளைந்து ஆன வாயு எனமுடிக்க. மேனிதீண்டிநிறைவித்தற்குக் காரணமாயுள்ளது நீரலைதலேயாதலின் நீரளைந்து நேரானவாயு என்றார்.

32. போசனம்பெற்றுப்பூரணமாதல்.

நுழைவாயில் - பலகணிவாயில். வாசம் - வசித்தல்.

இ - ள். கரியமேகமே! தங்கூந்தலுக்கு வாசனையூட்டுகின்ற குழலையுடையபெண்களிருக்கின்ற பலகணிவாயிலினின்றும் யோசனைதூரம்வந்து கருமணத்தைப்பரப்பிய ஒள்ளிய புகையை நீ சரீரத்திலளாவி மேனியூரித்து நிறைவுபெற்று அவந்தியில்வசித்தல் இனிமையுடைத்தென்று அன்புங் கொள்ளுவை. எ - று.

வாசனையூட்டும் என்றதனால் புகை, அகிற்புகைஎன்பதுபெற்றும். யோசனைவந்துஎன்பதனாற்புகையின் மிகுதியையுணர்த்தி அதனால்பெண்களின்மிகுதியைக்குறிப்பித்தலின் இப்பகுதி உயர்வுநவிற்சியணி. ஊட்டுமென்பதுகுழல் என்னும் செயப்படுபொருட் பெயர்கொண்ட பெயரெச்சம். வீசியஎன்னும் பெயரெச்சம் புகைஎன்னும்வினைமுதற்பெயர்கொண்டது. வந்து, அளைந்து, வளர்ந்து,நிறைந்துஎன்பன செய்துஎன்னும்வாய்பாட்டு இறந்தகாலப்பெயரெச்சங்கள். உம்மைஉயர்வுசிறப்பு. கொள்ளுவைமுன்னிலைவினைமுற்று.

33. விநோதவேடிக்கைபார்த்தல்.

இரமியம் - மகிழ்வைக்கொடுப்பது. அரமியம் - மேல்வீடு. திரம் - நிலை.

இ - ள். மேகமே! (கண்ணுக்கு) மகிழ்வைத் தருகின்ற பதுமினிப்பெண்கள்இருந்துவிளங்குகின்றமேல்வீட்டிலேறிஅங்கேஇருந்துகொண்டு அவந்திநகரத்தழகுமுற்றையும் நிலையுறப்பார்த்து நீ சிறிதிளைப்பாற அப்பொழுது (அம்மேல்வீட்டிலே)மகளிர் பாரமான தோகையையுடைய மயில்களைக் கூத்தாடவும்செய்வார்கள். அதனை நீயும் பொழுதுபோக்காகப் பார்க்குதி. எ - று.

ஆற கூத்துமாட்டுவார்எனமுடியும். உம்மை - அசை. செயவெனெச்சம் காலத்துவந்தது.

34. அவந்திமகாகாளர்கோயில்.

பகவான் - ஆறுகுணங்களையுடைய முதற்கடவுள். வாஞ்சை - ஆசை. திரிலோகம் - மூவுலகம். சண்டி - துர்க்கை, உமையுமாம். சகவாசன் - கூடவசிப்பவன். வாரி - கடல். கேத்திரம் - கோயில். இதுக்ஷேத்திரமென்னும் வடமொழித்திரிவு.

இ - ள். மேகமே!இது எமது பகவானுடைய காளகண்டத்தின் ஒளிக்கு ஒப்பானதுஎன்றுபலசிவகணங்களும் மிகவாஞ்சைகொள்ளும்படி மூவுலகங்களுக்குமதிபதியும், விளங்குகின்ற துர்க்கையோடுகூட இருப்பவரும், மகேசனுமாகிய சிவபிரானுடைய திருவடிகளைத்தொழுகின்ற அன்பர்களுக்கினிய இன்பக்கடலைக்கொடுக்கின்ற அவ்வவந்தியிலுள்ள மகாகாளமென்னும் ஆலயத்தை வலஞ்செய்வாய். எ - று.

மேகமே நீ மகாகாளர்கோயிலைச்சூழுதி. சூழும்பொழுது அங்குள்ள சிவகணங்கள் உன்னைநோக்கி இது எமது மகாகாளேசருடைய காளகண்டத்தின் காரொளிக்கொப்பானதென்று எண்ணி ஆசைவைப்பர்என்பது கருத்து. [illegible] யுமென்னும்பெயரெச்சம் மகா[illegible] இடப்பெயர்கொண்டது. கொள்ளச் சூழ் எனமுடிக்க. காரியப்பொருட்டு.

35. தங்குதற்கேற்றசிங்காரவனம்.

மடவார் - பெண்கள். கதுப்பு - கூந்தல். மது - தேன்.

இ - ள். கரியமேகமே! புதுப்புனலில் ஆடுகின்றபெண்களது மேனியிலுள்ளபூவின்மணத்தையும் கூந்தலிற்பொருந்தியபூவையும்பரிமளசந்தனத்தையும் கவர்ந்துகொண்டு நாடோறும் மதிக்கப்படுகின்ற கந்தவதி நதியிலுள்ள காற்றுவர, அசைந்துதேனைச்சொரிகின்றசோலையும் அம்மாகாளதலத்துண்டு எ - று.

கவர்ந்துவர அசைந்துபொழிசோலையென இயைக்க. வரஎன்னுஞ்செயவெனெச்சம் ஏதுப்பொருட்டு.

36. மகாகாளர்கோயிற்சேவை.

வாகு - அழகு.

இ - ள். வானிலுள்ள மேகமே! மாகாளேசர் கோயிலின் கண்ணேபொழுது படுமட்டும் போகாமல்வேறிடத்தே தங்கிநின்று பின் மாலைப்பொழுதிலே அங்கேபோகுதி. போய், காளகண்டராகிய அம்மாகாளேசர்க்கு மின்னொளியைவிளக்கையும்ஏற்றுதி. அன்றியும், பூசனைசெய்யும்பொழுதும் அழகார்ந்த மத்தளமாகவும் முழங்குதி. எ - று.

மேகமே!மாகாளேசர்க்குமாலையிற்சென்றுவிளக்கேற்றிமத்தளமடித்துத் தொண்டுசெய்என்பதுகருத்து. இது உருவகத்தோடு கூடிய தற்குறிப்பு என்னுமலங்காரம். போகாமல் - மல்லீற்றுவினையெச்சம். ஏற்றுதி, முழங்குதி என்பனமுன்னிலை வினைமுற்றுக்கள்.

37. பூசனைப்போதில் உருத்திரகணிகையர்நடித்தல்.

சந்நிதி - சமூகம். வெப்பு - உஷ்ணம்.

இ - ள். விண்ணில்வசிக்கும்மேகமே! (முழங்கிய) அப்போது, மாகாளேசர் சந்நிதிமுன்பாக லயம்பொருந்த அடிகளைவைத்து மிதிக்குமிதியாலே சதங்கையொலியைக்காட்டிச் சாமரையை அசைத்தலால் கைம்மலரலுத்த உருத்திரகணிகையர்களது நடனத்தையும் பார்த்து அவர்களுடைய வேர்வையும வெப்பமும்போக மெல்லிய துளிகளைவீழ்த்துதி. அப்போது உன்னை விரும்பிநோக்குவர். எ - று.

இங்கேசாமரையசைத்துக் கொண்டு செய்யும்நாட்டியமென்றது தேசிகத்தை. தேசிகம்என்றும் மார்க்கம்என்றும். நிருத்த மிருவகைப்படும். தேசிகமாவது:— வாள் மாலை வீணை முதலியவைகளைப் பிடித்துக் கொண்டாடுவது. மற்று - அசைநிலை. வினைமாற்றுமாம். கைப்போது அலுத்த கணிகையர் என்பது சினைவினை முதன்மேனின்றது. வீழ்த்து - விகுதிகுன்றிய முன்னிலைவினைமுற்று

38. பூசைமுடிவிற் செக்கர் மேகமாய்ச் சோலைக்குப்போதல்.

அரத்தை - செவ்வரத்தை. பவானி - உமை.

இ - ள். கரியமேகமே! பூசைமுடிவிலே மாகாளருடைய நாட்டிய காலத்தில் நீசெவ்வரத்தம் பூப்போலசசிவந்த நிறத்தைப் பொருந்தி ஆசைமிக்க உமாதேவிக்கும் ஒப்பற்ற பயத்தை அங்கே நீக்கி வாசனைமிக்க மலரையுடைய சோலையையடைகுதி. எ - று -

மருவி அகற்றிச் சேருதியெனமுடிக்க. பவானிக்கு வரும்பயமாவது:— மாகாளர் யானைத்தோலைப்போர்த்து ஆடுதலினுண்டானபயம். அதையகற்றுதலாவது:— அவருடைய நாட்டியகாலத்திலே செந்நிறமாகப் பொருந்தி ஓர்போர்வைபோலமூடி யானைத்தோற் போர்வையை விடச்செய்து அதன் பயமில்லாமற் செய்தல்.

39. தூர்த்தநாயகரைத்தேடும் மகளிர்க்கு வழிகாட்டல்.

இ - ள். நீரைக்கொள்ளும் மேகமே! நீ பின், தமது உயிர்போன்ற நண்பர்களாகிய சோரநாயகரைத்தேடிக் கொண்டுவிளங்குகின்ற இருளிலே நல்ல நேர்வழியே செல்லாது வழிதப்பிச்சென்றபெண்களுக்கு மின்னலைச் செய்து வழிகாட்டுதி. மழையைவிட்டுவிடு. வாளாமுழங்காதே. அப்பெண்கள் அஞ்சுவர். எ - று.

நண்பர் என்றதனால் சோரநாயகர் என்பதுபெற்றாம். வாளாமுழங்கல் - பயனின்றி முழங்கல். காட்டு விட்டுவிடு என்பன விகுதிகுன்றிய முன்னிலையேவல்வினைமுற்றுக்கள். முழங்கல்என்பது எதிர்மறையேவல்வினைமுற்று. அல் எதிர்மறையிடைநிலை.

40. துயிலிடங்காட்டல்.

தூது - கோடாங்கல். சோகம் - துயரம்.

இ - ள். மேகமே!சிறிதுஞ் சனங்களில்லாததாகி, நித்திரைக்கியைந்ததாகி கோடாங்கற்களையுண்கின்ற புருக்களிருக்கப்படுகின்ற ஒப்பற்ற மாடச்சுவரின்மேல் நீ துயின்று அந்த இராக்காலத்தைக்கழித்து வருகின்ற புலரிக்காலத்திலே அங்கேநித்திரைவிட்டெழுகுதி. மின்னல்தந்த துயரும் தீரும். எ - று.

சனங்களின்ஆரவாரம் நித்திரையைக்குழப்புமாதலிற் சனங்களிலதாகியென்றும், குழப்பமின்றி நித்திரைசெய்தற்கேற்ற படுக்கை என்பதுபோதரவேற்றதுவாய் என்றும், அச்சமின்றி நித்திரை செய்தற்கேற்ற துணையுமுண்டு என்பது போதர தூதுண் புருக்களுறை தனிமாடமென்றுங் கூறினன். மின்னல் தந்தசோகம் என்றது, மின்னாகிய மனைவியோடு அடிக்கடி கூடலால் உண்டானசோகத்தை. துஞ்சி அகற்றி எழும்புதி எனவினைமுடிக்க. தந்த சோகம் என்பதில் தந்த என்னும் பெயரெச்சம் சோகம் என்னும் செயப்படுபொருட் பெயர்கொண்டது.

41. விடியற்காலத்தில் வீட்டுக்குவரும் நாயகர்.

தவர் - நாயகர். கண்டிதைமாதர் - பரத்தையர்வீடுசென்று விடியற்காலத்தில் வரும் நாயகரையுடைய பெண்கள். அம்புயம் - தாமரை. சீறுதல் - கோபித்தல்.

இ - ள். வீட்டிற்குவருகின்ற நாயகர் கண்டிதை மாதரது கட்புனலை நீக்குகின்ற விடியற்காலத்திலே, சூரியன் மேற்குத்திக்குச் சென்று (தாமரையாகிய பெண்ணிடத்திற் கொண்ட) அன்பால் மீளவும் கிழக்குத்திசையை யடைந்து அம்மலர்ப் பெண்ணின்கணுள்ள பனியாகிய வேர்வையைத் துடைக்கும்படி தன்கிரணமாகிய கைகளை நீட்டுவன். அப்போது நீ இடைசென்று மறைக்காதே. கோபிப்பான். எ - று.

பரத்தையர் வீட்டில் இராப்பொழுதைக் கழித்துவிட்டுப் புலரியில் வந்த தமது தலைவியருடைய கண்ணீரையும் வேர்வையையுந் துடைத்து அவரூடலை நீக்கும் விடியற்காலத்திலே, சூரியனாகிய நாயகனும், மேற்றிசையிற் பிரிந்தும். மீளவுங் கீழ்த்திசை யடைந்து தன்மனையாகிய தாமரைமலரின் பனியாகிய வேர்வையுந் துடைக்கக் கரங்கள் நீட்டும் நீ மறைக்காதே. மறைத்தாற் கோபிப்பான் என்பது கருத்து. மறைக்கலை - எதிர்மறை முன்னிலை ஏவல்வினைமுற்று. அவயவ உருவகம்.

42. கெம்பீரையாறு.

நின்மலம் - அழுக்கின்மை. மயல் - மயக்கம். மதி - அறிவு. மாட்டுதல் - பொருத்துதல்.

இ - ள். மேகமே! பரிசுத்தமான நீர் நெருங்கிய கெம்பீரை என்னும் பெயரையுடைய யாறுபின் மயங்கியதை நினைத்து உன்மன நாணினாலும், முன் உன்னுடையகரிய நீழலைப் பற்றித் தன்னுள்ளே இழுத்துப் பின்னே மலர்ந்த கயல்களென்று சொல்லும் கண்களைக் காண்பித்தும் பெரிய மயக்கத்திலே உன்னுடைய அறிவை மாட்டும். ஆகையால் நீ அங்கே நில்லாமல் ஓடுதி. எ - று.

நிர்மலம் என்னும் வடமொழி நின்மலமென்றாயிற்று. வேசியர் முன்னடையில் நின்று போவாரைக் கையிற்பிடித்து இழுத்துக் கண்களைக்காட்டி

ஆசையிலே மாட்டுதலை இங்கே நதியிலே ஆரோபித்தலால் இது தற்குறிப்பு என்னுமணி. நதி இழுத்து காட்டி மாட்டும் எனமுடிக்க. ஓடுவை - முன்னிலை ஏவல் வினைமுற்று.

43. தேவகிரி.

தாண்டுதல் - கடத்தல். நொய்து - மென்மையானது. அதவம் - அத்தி மரம். துணை - வழித்துணை.

இ - ள். நண்ணிய மணலையுடைய அவ்வாற்றைக் கடந்து உன்னுடைய மழையினாலே மென்மைபட்டதாய் இளகுகின்ற மண்மணக்கவும், அத்தி மரங்கள் பழுக்கவும் வருகின்ற குளிர்காற்றானது தன்னிடத்தே நிறைந்த வாசனையோடும் மெல்லவாக வீசி (உனக்கு) மிக்கவழித்துணையாம். (ஆகையால்) ஆறுமுகப் பெருமானது தேவகிரியின் வழியாகச்செல்லுதி. எ - று.

தாண்டிச் சார் எனவும், நாறப் பழுக்க வருங் குளிர்காற்று எனவும் கூட்டிமுடிக்க.

44. பூமழைபெய்தபிடேகமும் பூசையுஞ்செய்தல்.

தோம் - குற்றம். கிளை - இனம். காம+அரி=காமாரி. மன்மதனுக்குப் பகைவன்=சிவன். மணம் - வாசனை.

இ - ள். மேகமே! குற்றம்பொருந்திய அசுரவினத்தை யழிக்கும்படி சிவனுடைய நெற்றிக் கண்ணினின்றுந் தோன்றிய குமாரக்கடவுள் பெரிய தேவகிரியின்மேல் நிறைந்த அருளோடிருப்பர். (அவருக்கு நீ) கங்கையை யடைந்து, படிந்து மணத்தையுடைய புஷ்பமழையைச்சொரிபவனாகி அபிஷேகத்தையும் பூசனையையும் செய்குதி. எ - று.

களைய வந்தவர் இருப்பர் எனவும், சார்ந்து ஆகிப் புரி எனவும் முடிக்க.

45. சந்நிதிமாயூரத்துக்கும் மஞ்சனமாட்டல்.

சேய் - புதல்வன். பவானி - உமை. மாயூரம் - மயில். நீட்டல் விகாரம்.

இ - ள். கரிய மேகமே! எமதுகுமாரன் ஊருவதென்று உதிர்ந்த சிறகுகளைக் கண்சென்று பரக்கின்ற காதிலணியும் அணியாகக் கொள்ளும்பொருட்டு ஏற்று மகிழுகின்ற புகழைப்பொருந்தி, நீ செல்லும்போது உன்னைக்கண்டு நடனத்தையாடிக்கொண்டு அவ்விடத்தே நிற்கின்ற ஒப்பற்ற மயூரவாகனத்துக்கும் மஞ்சன மாட்டுதி. எ - று.

அமர்ந்து ஆடி நிற்கும் மயூரவூர்தி என இயைக்க. காதிலணிதற் கென்றாம். மேகத்தைக் கண்டபொழுதே களிப்பால் மயில்கள் நடித்த லியல்பாதலின் நீ யூரும்போது நடமாடிநிற்கும் என்றார். ஊர்தி - ஊரப்படுவது.

செயப்படுபொருட் பெயர். ஆட்டுதி - முன்னிலை ஏவன்முற்று. ஆட்டு - பகுதி. இ - விகுதி. தகரம் எழுத்துப்பேறு.

46. வீணைபாடும் விஞ்சையர் மகளிர்.

மாய்தல் - இளகிப் பண்ணழிதல். சஞ்சாரம் - அசைவு.

இ - ள். மேகமே! மயூரத்துக்குத் திருமஞ்சன மாட்டியபின்பு அங்கே வீணைவாசிக்க வருகின்ற வித்தியாதரப்பெண்களது அவ்வீணைகளிலுள்ள நரம்புகள் உனது துளிவீழின் பண்ணழியும் என்று அஞ்சி அங்கே பெய்யாது விட்டுச் சிறிதிடம் போயபின்பு அங்கேவருகின்ற அசைவுபொருந்திய திரையையுடைய சர்மவதி நதியை யடைகுதி. எ - று.

47. சருமவதிநதி.

கோமேதம் - பசுக்களைப் பலிகொடுத்துச் செய்யும் யாகம். பராக்கு - வேறுநோக்கம்.

இ - ள். இரந்திதேவன் என்பான் கோமேதயாகஞ் செய்து குவித்து வைத்த தோல்களிலிருந்தும், ஒரு நதியாகிப்பெருகிவந்த தொடர்ச்சியினாலே பூமியிலுள்ளோர் சருமவதிநதி என்றுசொல்லுவர். அது வரும்போது நீ வேறு நோக்கமின்றிச்சிறந்த உபகாரங்களைச் செய்குதி. எ - று.

இரந்திதேவன் - சூரியவம்மிசத்தோரரசன். சர்மம் - தோல். தோலிலிருந்து வருதலாற் சர்மவதி என்றாயிற்று. உபசாரம் - நீர் சொரிதன் முதலிய மரியாதை.

48. சருமவதிநதியிற் றண்ணீர் குடிக்க விறங்குதல்.

வசுதேவர் பாலகன் - கிருஷ்ணன். வசை - குற்றம்.

இ - ள். கிருஷ்ணனைப்போல மேனி கருமைகொண்ட மேகமே! அந்நதியிலே பசிதீர உண்ணும்படி நீ இறங்க (அப்பொழுது நீ இறங்கப்பெற்ற) அந்த வெள்ளிய நதியை முறுக்கிய ஒரு நூலினிடத்தே நீலமணியை யிடையில் வைத்துச்செய்த புகழ்பெறும் முத்துவடமோ என்று தேவர்கள் நோக்குவார்கள். எ - று.

நீலம் இடையில் வைத்த எனவே இருபக்கமும் முத்துக்கள் கோக்கப்பெற்றது என்பது பெறப்படும். இசைதல் இசை என விகுதிகெட்டு முதனிலை மாத்திரையாய் நின்ற தொழிற்பெயர். இறங்க நோக்குவர் என முடிக்க. வசைதீரும் எனவே புகழ்பெறும் என்பது பெற்றாம்.

49. தசபுரமகளிர்.

தாண்டுதல் - கடத்தல். விடுத்தல் - செலுத்தல்.

இ - ள். மேகமே! சருமவதி நதியைக்கடப்பாயேல், அந்தத்தசபுரத்திலிருந்து வருகின்ற மகளிர்கள் அசைந்த குருந்தம் பூக்களிலிருந்து உழு

கின்ற வண்டிஞெளியைத் தினமுங்கவர்ந்து பொருகின்ற அந்தப்பார்வையைவிடுத்து உன்னை நோக்குவார்கள். நோக்கும்படி நீ அங்கே செல்வாய். எ - று.

தூண்டுவையேல் - எவீற்றுவினையெச்சம். அது நோக்குவர் என்னும் வினைமுற்றோடு முடியும்.

50. குருக்ஷேத்திரம்.

மாரி - மழை. செருக்களம் - போர்க்களம். தரும + ஆலயம் = தருமாலயம்.

இ - ள். கரியமேகமே! பின்பிரமாவருத்தமென்று சொல்லும் அழகியநாட்டின் கண்ணேபோய், அருச்சுனன் உன்னுடைய கூட்டமானமழைபோல சிரமழைகள் விழச் சரமழைகளைச்சொரிந்த போர்க்களமாகிய தருமத்துக்கிடமான குருக்ஷேத்திரத்தைப் பார்க்குதி எ - று.

பிரமாவருத்தம் சரஸ்வதி திருஷத்துவதி என்னும் யாறுகளுக்கு நடுவேயுள்ளதேசம்.

51. சரஸ்வதிநதி.

தேண்டி - தேடி.

இ - ள். மேகமே! பாண்டவரிடத்தும் நூற்றுவரிடத்தும் வைத்து நீட்டித்த பழமையான நட்புக்காரணமாக போரை வேண்டாதவராய், நல்ல தீர்த்தயாத்திரையை விரும்பி, அன்புபொருந்திய இரேவதியென்னும் பெயரையுடைய பெண்ணின்முலைகள் தேமல் பொருந்தும்படி நின்றவராகிய பலதேவரானவர் தேடியடைந்த சரசோதியென்னு மாற்றையும் சேருதி. எ - று.

வேண்டி தேண்டி அடைந்த சரசோதி எனமுடிக்க. தேண்டி - ணகரம் விரித்தல் விகாரம். உம்மை - எச்சம். சிறப்புமாம். பழநண்பு - சொல்லியதை மறுக்க மாட்டாதநண்பு. தம்மைப் படைத்துணையாக பாண்டவர் நூற்றுவரென்னுமிருபக்கத்தாருள் எவர் கேட்டாலும் மறுக்கமுடியாது; மறுத்து ஒருபக்கத்தாருக்காகச் சென்றால் மற்றைப்பக்கத்தார் கோபிப்பார். ஆதலால் எவரேனுங் கேட்கமுன் நான் தீர்த்தயாத்திரைசெல்வேன் என்று சாட்டுவைத்துச் சென்றவன் என்பார் வேண்டலன்; ...... வேண்டி என்றார்.

52. சரஸ்வதிநதி மகத்துவம்.

தெவ் - பகை. வகரமெய் மகரமெய் நோக்கித்திரிந்தது. அலப்படை - கலப்பை வடிவாகச் செய்தபடை.

இ - ள். கரியபெரியமேகமே! பகையையடைந்து கொல்கின்ற அலப்படையையுடையோனென்று சொல்லப்படுகின்ற அந்தப்பலதேவனுக்கு

புகழமைந்த சூதமுனிவனைக் கொலைசெய்த பாவத்தை யழித்துவிட்ட அந்தப் பெரிய சரஸ்வதிநதியிற் புகுந்து நீயுமுழுகுதி. உனதுமேனிபோல அகத்தே கறுப்பைப் பொருந்தாய். எ - று.

கலப்பைப்படையாற் பகைவரை உழுதுகொல்லுதல் பற்றித்தே மேவு அலப்படையோன் என்றும், பலகலைகளையும் உணர்ந்து உலகிற்பரவச்செய்யும் புகழுடையோன் என்பான், சொன்மேவு என்றுங்கூறினன். அகத்திற் கறுப்பு - மனத்தே பொருந்தியகுற்றம், பாபம். முன்னிலை எதிர்மறை வினைமுற்று. என மருவலை என இயையும்.

53. கங்காநதி.

குமாரி - புதல்வி. இவர்தல் - ஏறுதல். சோக + ஆகுலம் = சோகாகுலம். சுரபுரம் - தேவலோகம். சிந்து - நதி. அம்புதம் - மேகம்.

இ - ள். மேகமே! பாகீரதிஎன்றும், நல்லமந்தாகினிஎன்றும், சானவி என்றும், சொல்லப்படுவதும் உமைபோல இமயமலைக்குப் புதல்வியாயுள்ளதும் நரகமடைந்து துக்கமாகிய துன்பத்தைக்கொண்ட சகரர்களுக்கு சுவர்க்கம் போதற்கு ஏணியாயுள்ளதும் ஆகிய தேவகங்கை ஆகா! உனக்கு எதிரே பெருகிவரும். அதனையுங் காண்பாய். எ - று.

பாகீரதி - பகீரதனாற் கொண்டுவரப்பட்டது. மந்தாகினி - மந்தமாய்ச் செல்வது. சானவி - சன்னுமுனியின் காதின்வழியாக வந்தது. இமயத்திற் பிறந்துவருதலின் நாகாதிபன்றனக்கும் குமாரியெனப்பட்டது. கபில முனிவரின் கோபத்தால் எரிந்து நரகத்தையடைந்த சகரருடைய எலும்பிற் பெருகி அந்நரகத்துயரை நீக்கிச்சுவர்க்கமடையச் செய்ததாகலின் பொன்னாட்டிவர் ஏணி என்றும் கூறினன்.

காண்குதி - முன்னிலை ஏவல்வினைமுற்று. காண் - பகுதி. இ - விகுதி. ககரமெய்யெழுத்துப்பேறு. கு - சாரியை. ஆகா வியப்பின்கண் வந்த குறிப்புச்சொல்.

54. கங்கையிற் பிரயாகையின்றி யமுனைசங்கமங்காட்டல்.

பங்கம் - குற்றம், அழுக்கு. சோபை - பிரபை

இ - ள். கரியமேகமே! சீகுற்றமில்லாத பளிங்குபோல வெண்ணிறம் பொருந்திய நீரையுண்ண நீ சென்றுபடியும்போது, அக்கங்கையும் ஓர்பாகத்தில் உன்கரிய நிழலைக் கவர்ந்து பிரயாகைநதிபோல யமுனைசங்கமத்தாலுண்டான பிரகாசத்தையடையும்.

கங்கையும் யமுனையும் கலக்குமிடமாகிய பிரயாகையிலே எப்படி இருநிறங்கூடிய ஒரு பிரபைதோன்றுமோ அதுபோல நீயும்சென்று படியும்போது இருநிறங்கூடிய ஒரு பிரபை தோன்றுமென்பான் இங்ஙனம் கூறினன்.

சங்கமம் - கலக்குமிடம். யமுனை - எமுனையென்றாயிற்று ஆவீறுதிரியாதுநின்றது.

55. இமயமலைக் கொடுமுடிப்படுக்கை.

கத்தூரி - மானினுண்டாகும் வாசனையான ஒருசொழுப்பு. கனகலம் - கங்கைக்கரைக்கணுள்ள ஓரிடப்பெயர்.

இ - ள். நீரையுடைய மேகமே! அக்கங்கையின்கண்ணே சுத்தமான பரிமளத்தைச்செய்கின்ற கத்தூரியைத்தரும மானினங்களின் வரிசைசூழ்ந்த கரையையும், மிக்க கனகலமென்னுமிடத்தையும் கண்டு இமயமலையின் உச்சியாகிய படுக்கையையடைந்து நித்திரைகொண்டு சிறிது இளைப்பாறுவாய். எ - று.

பத்தியின் மூடும் என்னும்விசேடணம் மலையைவிசேடியாது இமத்தை விசேடித்துநின்றது. இமம் - பனி. பனிவரிசையாக மூடிய அசலம் இமயம்என்பது கருத்து. எய்திஎன்பது இகரவீற்றுச் செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆறுதி - முன்னிலை ஏவல்வினைமுற்று. கண்டு எய்தி நித்திரைகொண்டு ஆறுதிஎன முடிக்க.

56. நன்றிமறவாது அடுக்கலின்நெருப்பவித்தல்.

இ - ள். நல்லமேகமே! மிக்க திறலையுடைய காற்றின் கதியானது தேவதாருக்களை அசைக்க அவைகள் ஒன்றோடொன்று உரோஞ்சுதலால் உண்டானநெருப்பு சஞ்சரிக்கின்ற கவரிமான்களின் மெல்லிய ஒப்பில்லாத வால்களிற் பற்றி மலையின்மேலும் பற்றிவிடுமானால் அம்மலை உனக்குப் படுக்கை உதவிய நன்றியைமறவாமல் நீரைச்சொரிந்து அந்நெருப்பைத் தணிக்குதி - எ - று.

மேலேயிருந்து பற்றிக்கீழேவருதலின், வாலிற்பற்றிக்குன்றினும் பற்றிவிடின்என்றான். கம்பரும். "கொடியைப்பற்றி விதானங்கொளுத்தித்தான் நெடியதூணைத்தழுவி நெடுஞ்சுவர் - முடியைச்சுற்றி முழுதுமுருக்கிற்றால் - கடியமனைதோறுங் கடுங்கனல்," என்று கூறுவர்.

மறக்கலை - முன்னிலை ஏவல் எதிர்மறைத்தெரிநிலை வினைமுற்று எச்சப்பொருட்டாய்நின்றது. விடில்ஆற்றுதி என்றும், பொழிந்து ஆற்றுதிஎன்றும் தனித்தனிமுடிக்க.

57. கன்மழையும் எண்காற்பறவையும்.

இமய + அசலம்=இமயாசலம், இமயமலை. எண்காற்பறவை - சரபம்.

இ - ள் - மேகமே! விண்ணிற்காணும்படி அந்த இமயமலைக்கு மேலே விரைந்து கண்ணாற்காணுதற்குக் கூடாததன்மையோடு பறந்து உயர்ந்து வருகின்ற எண்காற்புள் (ஒருவரும்) எதிர்க்கமுடியாத நின்னை எதிர்க்குமென்றால் முழங்கிக் அதன்கண்களும் கால்களும் சிதறும்படி கன்மழையைப் பெய்குதி. எ - று.

காணவரும் என இயைக்க. எதிரா - செயப்பாட்டுவினை. எதிர்க்குமெனின் என்பது. செ[illegible]ய்பாட்டு எதிர்காலவினையெச்சம். அது வழங்குதி என்னும் பிறவினைகொண்டு முடிந்தது. சிதற - செயவென்னும் வாய்பாட்டுவினையெச்சம். காரியப்பொருட்டு.

58. இமயமலையிற் றிருவடிதரிசனம்.

புராந்தகன் - சிவன். ஆர்விகுதி உயர்த்தற்கண் வந்தது. அழுத்துதல் - பதித்தல். நலம் - இன்பம்.

இ - ள் - நல்லமேகமே! பொன்மயமமைந்த இமயமலையிற் புகுகின்ற நாளிலே, சிவபிரான் கல்லிலேபிரகாசமுறப் பதித்த பாதச்சுவட்டையுந் தரிசித்து அதனைத் தஞ்சமென்றடைகுதி. அதனை புகழமைந்தயோகியர் நாடோறும் வணங்குவர். வணங்காதவர் யாவர்? (எவருந்தொழுவர்.) அத்தகைமையான அது நீயடையின் உனதுபாவத்தைநீக்கி இன்பத்தைத்தரும் எ - று.

மேகமே! நீ இமயம் புகுந்திடுநாளிற் பாதமுங்கண்டடைதி. அதனை யோகியருந் தொழுவர் எவருந் தொழுவர். அத்தகைமையையுடைய அது நீ அடையின உன்பாவத்தை நீக்கி இன்பந்தரும் என்பது கருத்து. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யாவெனன்னும் வினைப்பெயர் ஈண்டுஇன்மைகுறித்துநின்றது.

59. திருவடிக்குச் சங்கீதமத்தள சேவை.

இ - ள். தூதுசெல்லுதற்கினிய மேகமே! இமயமலை புதல்வியாகிய உமாதேவிக்கினிய சிவபிரானுடைய சிவந்ததிருவடிச்சுவட்டின் சேவையின் பொருட்டு, பெருமைபொருந்திய கிந்நரமாதர்கள் கீதம்பாடுவார்கள் காற்று வீசுதலால் மூங்கில்களும் காதுக்கினிய ஒலியைக்காண்பிக்கும். நீயும் மத்தளமாகமுழங்குதி. அத்தொண்டு உனக்குச்சுகந்தரும். எ - று.

அடி - அடிச்சுவடு. ஆகுபெயர். முழங்கு - ஆய்விகுதிகுன்றிய முன்னிலைஏவல் வினைமுற்று.

60. கிரவுஞ்சப்புழை.

இ - ள். நீரைச்சொரிந்தமேகமே! இமாலயமென்னும் பழைய மலைப் பக்கங்களில் நுண்ணிதாகப் பார்க்கப்படும் சிறப்புக்களை அங்கங்கே பார்த்தபின், அப்பால், குமாரனாற் றுளைக்கப்பட்டு அழகிய அன்னங்கள் செல்லுகின்ற விளங்குகின்றகிரவுஞ்சமலைத் துவாரவழியே நீயும் குனிந்து புகுந்து அப்பாற்செல்லுதி. எ - று.

ஆலயம் - இடம். துளைத்து - செயப்பாட்டுவினை. துளைத்து எனும் புழைஎனமுடிக்க.

61. திருக்கைலாசம்.

இ - ள். மேகமே! அந்தக்கிரவுஞ்ச மலைத்துவாரத்தைக்கடந்தபின் ஆகாயத்திலுயர்ந்து இருபது நீலமலைகளுள்ளனவென்றும் அவற்றின் மேலாக ஒரு வெண்மலையுள்ளதென்றும் செப்பும்படி அந்நாள் இராவணன் தூக்குதலால் சந்துகளுளவான, மடமையுடைய தெய்வப்பெண்கள் தம் அழகை அலங்காரஞ்செய்து பெறுதற்குக் கண்ணாடிபோல உயர்ந்துள்ள, கயிலாசமலையையும் பார்க்குதி. எ - று.

இராவணன் கயிலாசமலையைத் தூக்கியபொழுது அதன் பொருத்துக்களாவும், பிளந்து தெரிந்தனவாதலின் அண்மியசந்துள என்றும். பளிங்குபோல வெண்ணிறமுடையதாதலின், ஆடியெனென்றும், இராவணன் தன் புயங்கொண்டு தூக்கியபொழுது கயிலாசம் மேலேதோன்ற அவன் தோள்கள் கீழே இருபதுமலைகள்போலத் தோன்றியவாதலின், இருபான்றிண் மலைகீழென வெண்மலைமேலெனச்செப்ப என்றுங் கூறப்பட்டன. (அண்மிய சந்து - உண்ட இளைப்பு என்பதுபோலக் காரியப்பொருட்டாய் நின்றது). செப்ப என்பதின் அகரந்தொக்கது. கண்மலியாடி - கண்ணுக்கு ஒளிமலிந்த ஆடி.

62. அப்போதுஓர் ஐயக்காட்சி.

காந்தி - ஒளி. சையோகம் - கூட்டம்.

இ - ள். கருமையாகிய மிக்க ஒளியையுடையமேகமே! வெண்மையாகியகயிலைமலையின்கண் நின்மெய்யானது ஏறும்பொழுது (அத்தோற்றம்) பலதேவனுடைய வெண்ணிறமான சரீரத்தின்மேல் ஒப்பனையிக்கநீலமணிபோலச் சிறந்துள்ள நீலாம்பரஞ் சேர்ந்தகூட்டமோ என்று அங்கே இருப்பவர்களுக்குச்சந்தேகமு முண்டாம். எ - று.

மேகமே! வெண்ணிறமான கயிலைமலையின்மேல் கருநிறமானநின்மேனி ஏறுபோது, வெண்ணிறமேற் கருநிறம் பொருந்திவிளங்குந் தோற்றம், பலதேவனுடைய வெண்ணிறமேனியிலே நீலாம்பரம் பொருந்திய தோற்றம் போலிருக்குமென்பதுகருத்து. உம்மை - சிறப்பு. சேர் சையோகம் - இறந்தகாலவினைத்தொகை. இதுநிறம்பற்றிவந்த உவமம்.

63. உருமாறிமலைக்கேறும்படியின்வடிவாகெனல்.

கங்கணம் - காப்பு. பவனி - உலா. படி - கால்மிதித்தேறுவது.

இ - ள். கருமைநிறைந்த பெரியமுகிலே! நெய்பூசிய கூந்தலையுடையளாகிய உமாதேவியஞ்சுமென்று சிவபிரான், (தன்கையிலணிந்த) சர்ப்பகங்கணத்தை நீக்கிக் கைகோத்துச் செல்கின்ற உலாவந்தால், அவ்வருகைக்கு முன்னே சென்று பெய்யாமல் நீரைஉள்ளே அடக்கி வேறுவடிவாய்ப்படியாகி இருக்குதி. எ - று.

64. இயந்திரதாரைவீடு.

மங்களம் - நன்மை. துங்கம் - உயர்ச்சி. கிருகம் - வீடு.

இ - ள். கரியமேகமே! நன்மையைத்தரும் உயர்ந்த கயிலாயமலையிலிருக்கின்ற தெய்வப்பெண்கள் காப்பின்நுதியின் தாக்கினால் உடைத்து அங்கே உன்னை இயந்திரதாரைவீட்டைப் போலக்கொண்டு அடைத்து வைப்பார்கள். ஆகையால், அங்கே நீரைப்பெய்யவிரும்பிலையாயின் அவரஞ்சும்படி முழக்கத்தைச் செய்குதி. எ - று.

எதிர்மறை உம்மை தொக்குநின்றது. உடைத்து அடைத்துவைப்பார் என இயைக்க. இயந்திரதாரைக்கிருகம் இயந்திரத்தாற் செய்யப்பட்டதாய தாரைகளைச் சொரியும் வீடு. தாரை - மழையொழுக்கு.

65. மானசவாவி.

இ - ள். பொற்றாமரை மலருகின்ற மானசவாவியிலுள்ள நீரைக்குடித்து அங்கே நீர்குடித்துவந்து ஏறுகின்ற வெள்ளையானையின்முகத்திலே உயர்ந்த படாமாகி, நல்லதருவாய் விளங்கிய கற்பகத்தின் சிறந்த தளிர்களை மிகஅசைத்து முழுவிருப்போடு புனல் விளையாட்டையுஞ் செய்குதி. எ - று.

குடித்து ஆய் அசைத்து முற்றுவை என இயைக்க. படாம் - முகத்தை மறைக்க இடும் வஸ்திரம்.

66. அப்பாலளகையெனல்.

வேண்டுதல் - விரும்புதல். "வேண்டுதல்வேண்டாமையிலான்," என்புழிப்போல. பாண்டுநிறம் - வெண்ணிறம். தாண்டுதல் - கடத்தல். மிகை - அதிகம்.

இ - ள். விரும்பியவடிவைப் பூமியிலேகொள்ளுகின்ற வலியைப்பெற்ற விண்ணிற்சரிக்கும் மேகமே! உயர்ந்து நிமிர்ந்த கயிலைமலையின்மேற் பெருகுகின்ற ஆகாயகங்கை தான் வெண்ணிறத் துகில்போல் விளங்கும். அளகைநகர்க்குச் செல்லுகின்றவழியும் இதுவே யறிந்துகொள். இனியான்சொல்லுதல் மிகையாகும். (வேண்டியதன்றாம்). எ - று.

படி என்பதற்கு விரும்பியபடிஎனக்கொள்ளினு மமையும். ஆகும் என்னும் பெயரெச்சம் அளகை என்னும் செயப்படுபொருட் பெயர் கொண்டது. உம்மை தெரிநிலை. தான் - தேற்றப்பொருளில் வந்ததோ ரிடைச்சொல்.

உத்தரமேகம்.

1. அளகாபுரத்துமேல்வீடும்மழைத்துளியும்.

புனைதல் - சூடுதல். எழுநிலைமாடம் - ஒன்றின் மேலொன்றாகச்செய்யப்பட்ட எழு நிலங்களையுடையமாடம்; எழுமெத்தைவீடு என்பது வழக்கு. "எழுநிலைமாடம் கால்சாய்ந்துக்கு" என்றார் பிறரும்.

இ - ள். ஒப்பனைமிக்க மேகமே! பூமியிலே ஒருபெண் உயர்ந்த வெண்மையான முத்துமாலையை அழகு தன்மேல் அதிகரித்த கூந்தலிலே அணிந்திருக்குந் தன்மைபோல, ஆகாயத்தின்கண் உயர்ந்த எழுநிலைமாடத்தின் மேல் அளகாபுரமானது குளிர்ச்சி பொருந்திய நும் இனமாகிய மேகங்கள் பெய்கின்ற துளிகளைத்தாங்கி நிற்கும். எ - று.

பெண் எழுநிலை மாடத்துக்கும், கூந்தல் மேகத்துக்கும், முத்தமாலை மேகம் பெய்யும் துளிகளுக்கு முவமையென்க. நும் என்பது உயர்வுபற்றிய பன்மை.

பெய்துளி - வினைத்தொகை. பண் - பண்ணுதலுமாம்.

2. அளகைக்கும் முகிற்குஞ்சிலேடை.

உபலம் - கல். சூலம் - மாளிகை. உபரிகை - மேல்வீடு. வாஞ்சித்தல் - ஆசைகொள்ளுதல்.

இ - ள். மேகமே! பெண்களிருக்கும் இயல்பினோடும் இந்திரவிற் போன்ற சிறந்த சித்திரவடிவுகளையும், அச்சம் பொருந்திய முரசங்களின் முழக்கையும், உனது நீரின் றன்மை விளங்குகின்ற பளிங்குக்கல்லும் பொன்னுமாகிய இவற்றால் செய்தல் பொருந்திய மாளிகைகளையும் மேல்வீடுகள் வாழ்தலையும் பொருந்தி நின்று, மேன்மை பொருந்திய அளகாபுரியும் உன்னோடு உவமையாதற்கு ஆசைப்படும். எ - று.

இனி, மேகத்திற்கியையப் பொருள்கொள்ளுங்கால் மின்னல்கள் பொருந்திய நிலைமையோடு இந்திர வில்லின் சிறந்தவடிவும் அச்சம்நிறைந்த முரசம்போன்ற முழக்கமும் நீரின் றன்மையும் மேல் வீட்டில் வசித்தலையும் எனப்பொருள் கொள்க. அளகையும் என்பதில் உம்மைசிறப்பு. ஏனைய எண்.

3. அறுவகைப்பருவமும் அப்பொழுதேகாண்டல்.

சோமன் - குபேரன். சீமந்தரேகை - உச்சிவகிர்.

இ - ள். அழகியமேகமே! குபேரனுடைய அளகாபுரத்திலுள்ள மேல் வீடுகளிற் சூழ்ந்திருக்கின்ற பெண்கள் தம் சீமந்தரேகையிலே சூட்டிய கடம்பின் செழியமலர்கள் உனக்குரிய காமஞ்சிறப்பவருகின்ற கார்காலத்தைக் காட்ட, கைகளினிடத்தே பொருந்திய அழகைத்தருகின்ற செந்தாமரை மலர்கள் கூதிர்காலத்தைக் காட்டும். எ - று.

நின் கார் என இயைக்க. காட்டும் என்பது செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச் சொல். கார் - ஆவணி, புரட்டாதி. கூதிர் - ஐப்பசி, கார்த்திகை.

4. இதுவுமது.

துணர் - பூங்கொத்து. சுருள் - மயிர்ச்சுருள். வசந்தம் - இளவேனில். பிற்கோடை - முதுவேனில்.

இ - ள் மேகமே! செறிந்த கூந்தலிலணிந்த குருந்தமலர்கள் முன்பனிக்காலத்தையும், வெள்ளிலோத்திரத்தின் அழகிய பூங்கொத்துக்கள் முகத்தைப் பொருந்திப் பின்பனிக்காலத்தையும், சிறந்தமயிர்ச் சுருளிலணிந்த குரவம்பூ இளவேனிற்காலத்தையும், நிமிர்ந்த செவியிலணிந்த வாகைப்பூ முதுவேனிற்காலத்தையும் காட்டும். இங்ஙனம் ஒரு பருவத்திலே ஆறு பருவங்களுந் தோன்றுதலைப் பார்க்குதி. எ - று.

குழல் சுருள் என்பவைகளை மயிர்முடியின் வகையாகக்கொள்ளினுமமையும். கடம்பமலரும், தாமரைமலரும் குருந்தமலரும் வெள்ளிலோத்திரமலரும் குரவமலரும் வாகைமலரும் முறையே கார்முதலிய பருவங்களாறிலும் மலர்வன; அவைகள் பெண்களால் அணியப்பட்டுப் பருவமொன்றிலேயே காணப்படுதலின், பருவங்களாறங் கொருபருவத்தினிற் பார் என்றான். முன்பனி - மார்கழி, தை. பின்பனி - மாசி, பங்குனி. இளவேனில் - சித்திரை, வைகாசி. முதுவேனில் - ஆனி, ஆடி.

சேருபு என்பது செய்பு என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம். நிமிர்செவி வினைத்தொகை.

5. அளகைநிலாமுற்றம்.

கந்தரம் - மேகம். சுந்தரம் - அழகு. சந்திரசாலை - நிலாமுற்றம்.

இ - ள். மேகமே! நின்முழக்குப்போல முழவு ஒலிக்கவும், மிகு அழகான பெண்கள் தம்மருகிற்றொடர்ந்து வரவும், அவ்வூரிலுள்ள இயக்கர்கள் நிலாமுற்றங்களிலேறி அந்தக்கற்பகதருவிற் றோன்றுகின்ற சுவையான நறவை (கள்ளை) ஏற்று உண்பார்கள் எ - று.

கறங்கச் சாரத் தாவி ஏற்று உண்பாரெனமுடிக்க. கறங்க வர என்பன செயவெனெச்சங்கள்.

6. தைசிகக்கிரீடை.

மந்தாகினி - தேவகங்கை. மந்தாரம் - ஐந்தருவிலொன்று. சந்தாபம் - மிகுவெப்பம்.

இ - ள். மேகமே! கங்கையிற்பொருந்திய குளிரானகாற்றுப் பக்கத்தே வந்துவீச, மந்தாரநிழலிலே யிருந்து தமது மிக்க வெப்பம் நீங்கிய பெண்கள் சிலர், கூட்டமான ஒளிபொருந்திய மணிகளைப் பொன்மணலுள்ளே புகச்செய்து ஒளித்தும், அம்மணிகளைத் தமது அழகிய கை முட்டிகளிற் கொண்டும் மிகவும் தைசிகவிளையாட்டை ஆடுவர். எ - று.

கைசிகமாவது:—மணிகளை மணலிலொளித்தும் கையிற் கொண்டும் விளையாடும் விளையாட்டு. இதனைக் கேச்சுமாச்சுத்தம்பளம் என்பர். கரமுட்டிகைப்பொத்து. அசைப்ப நீக்கிய மாதர் என இயைக்க.

7. எழுசெக்குமாளிகை.

விமானம் - கோயில். ஆலிகம் - சித்திரம். அபராதம் - குற்றம். ஆசங்கை - ஐயப்பாடு. சாலகம் - பலகணிவாயில்.

இ - ள். மேலான இடம்பொருந்திய அளகையிலுள்ள கோயிலின் மேனிலத்திலுள்ளே காற்றுக் கொண்டுவந்து வைத்த உன்னைப்போன்ற சில கருமேகங்கள், சித்திரங்களின் மேலே துளிகளைவீழ்த்திய குற்றத்தின் கண்ணே (அங்குள்ளார் தண்டிப்பாரோ என்று) சந்தேகமுற்றுச்சாளரத்தின் வழியாக அகிற் புகைவரல் போல (த்தன்னைக்காண்பித்து) வருவனவாகும். எ - று.

தான் - அசை. முகில்கள் ஆசங்கையாய் வரும் எனவும் சாலகமேல் வரும் எனவும் புகைபோலவரும் எனவும் தனித்தனி கூட்டுக. மேகங்கள் தாமே குற்றத்திற்கஞ்சித் தம்மை மேகங்களென்று அங்குள்ளார் உணராதபடி புகையேயாய்வரும் என்பான் இங்ஙனங்கூறினன்.

8. அர்த்தராத்திரி.

பால்நாள் - பாதிநாள். நாள் - மணம். களைப்பு - இளைப்பு.

இ - ள், மேகமே! அர்த்தயாம இருளில் அளகாபுரியிலே மணம் நிறைந்த கூந்தலையுடைய பெண்கள் நாயகரைச் சேர்ந்த இளஞ்சந்திரன் ஆகாயத்திலே வர நீங்காத சந்திரகாந்தக்கற்கள் நீரைப்பொழிந்து தணிக்கும். எ - று.

சேர்ந்தகளைப்பு உண்டஇளைப்பு என்பது போலக்காரணப் பொருட்டாய் நின்றது. களைப்பதனை ஆற்றிடும் என இயைக்க. அது பகுதிப் பொருள்விகுதி. ஆனது - எதிர்மறைத்தெரிநிலைவினையெச்சம்.

9. வைப்பிரசச்சோலை.

சேமநிதி - அழிவில்லாதநிதி (என்றது சங்கநிதிபதுமநிதிகளை). தோம் - குற்றம். காமிகள் - ஆர்த்தர்.

இ - ள். அழிவில்லாத நிதியையுடையவர்களும் தெய்வப்பெண்கள் தம்பக்கத்தே பொருந்தியிருக்கத் தாம் அவரோடுகூட இருக்கின்றமேன்மையுடையவர்களும் என்றுசொல்லப்படுகின்ற காமிகளான இயக்கர்கள் நாடோறும் குபேரனுடைய கீர்த்திகளைக் கவிகளிலே அமைத்துப்பாடிப் பூக்கள் மலருகின்ற வைப்பிரசச்சோலையின்கண் வாழ்வார்கள். அச்சோலையின்கண் நீயும் போகுதி. எ - று.

மலர்சோலை - வினைத்தொகை. குற்றமற்றவாக்கு என்றது இனிய கண்டசுரத்தை. எழுப்பி வாழ்வர் எனமுடிக்க.

10. அளகாபுரவேசையர்.

விடர் - ஆர்த்தநாயகர். தபன் - சூரியன்.

இ - ள். கரியமேகமே! இலைத்தொழிலமைந்த ஆபரணங்களையணிந்த பெண்கள் ஆர்த்தநாயகரைத்தேடி இருளிற்சென்ற களவை முலைகளிலமைந்த சந்தனக்குழம்பும், கூந்தலிலணிந்த மந்தாரமலர்களும், செறிந்தசெவியின்கண்வைத்த பூக்களும் சிதறிக்கிடக்கின்ற வழிகள் ஞாயிறு உதயமலையில் ஏறுகின்றகாலத்தில் (விடியற்காலத்தில்) எவர்க்கும் தெரியக்காட்டும் எ - று.

சென்றதை வழிகள்காட்டும் என இயைக்க. பெண்கள் தம் ஆர்த்தநாயகரைத்தேடி இருளிற்சென்ற களவை அவர்சென்றவழியிலே சிதறிக்கிடக்கின்ற சந்தனக்குழம்புகளாலும், பூக்களாலும், உணரலாம் என்பான் சிதறும் வழிகள்காட்டும் என்றான். காட்டுதற்குச் சிதறுதல் ஏதுவாய் நிற்றலின் ஏதுவணி. வழிகள்காட்டுமெனக் கருவி கருத்தாவாகக் கூறப்பட்டது.

11. அளகையிலே மன்மதன்போதற்கஞ்சுதல்.

இ - ள், உயர்ந்தமேகமே வடிவத்தோடும் சிவபிரான் குபேரனுடைய கண்பினுலிருப்பாரென்று, அருவத்தையுடைய ஒப்பற்றமன்மதன் அம்புகளைக் கருப்பம்வில்விற்பூட்டிக்கொண்டு அங்கேபுருஷர்களை (எய்ய) வருவதில்லை. அப்புருஷர்மனத்தை ஊடுருவும்படி புருவமாகிய ஒப்பற்ற வில்லில் கண்களாகிய அம்புகளைப்பூட்டி மகளிர்துளைக்கின்ற அத்தொழிலொன்றேமையும். (அவன்செயல்வேண்டியதில்லையென்றபடி). எ - று.

ஏ - அசை. என்று என்பது குறிப்பினால் ஏதுவாய் நின்றது. இதுவிலக்கென்னுமலங்காரம்.

12. கற்பகவிருக்ஷம்.

விற்பனம் - நூதனம்.

இ - ள் மேகமே! அழகுதன்னிடத்தே பொருந்திய அளகாபுரத்தில் [illegible] பெண்களுக்குப் பெருமைபொருந்திய பலப்பலவானநிறமமைந்த பட்டுகளையும் பூக்களையும் மதுவாகியபானத்தையும் நூதனமான ஆபரணங்களையும் செம்பஞ்சுகளையும்பிறவற்றையும்விரிந்தமலர்களையுடைய கற்பகவிருக்ஷமொன்றே தானேநின்று கொடுத்தலைக் காண்பாய். எ - று.

பூவையர்க்கு நீட்டுதல்காண் என இயைக்க. விற்பனம் விற்பனமான தொழிலுக்காதலின் ஆகுபெயர். கற்பகம் தானேவிரும்பியவெல்லாவற்றையும் கொடுத்தலின் தனிநின்று என்றார்.

13. வீட்டடையாளங்கூறல்.

சிறகு - தெரு=வீதி. சொன் - பெருமை. நீளிடை - தூரம்.

இ - ள். மின்னைக்காலுகின்றகரியமேகமே! இப்பொழுது என்வீட்டிலுள்ள அடையாளத்தையுங் கேட்குதி. (அது) குபேரனுடைய மாளிகையின் அருகே வடதெருவைப்பொருந்தி இந்திரனுடைய பெரியநகரியழகையுங் கவர்ந்து ஒளிபொருந்திய தோரணங்களையுடைய கோபுரத்தினால் தூரத்திலேயே காணப்படும் எ-று.

அது ஆர்ந்து கவர்ந்து வெளிப்படும் எனமுடிக்க. அது தோன்றா எழுவாய்.

14. மந்தாரவிருக்ஷம்.

சந்து + ஆரம். ஆரம் - முத்துவடம்.

இ - ள். கரியமேகமே! சந்தனக்குழம்பையும் முத்துவடத்தையுமணிந்த பெரியமுலைகளையுடையவளாகிய என்மனைவியானவள் வீட்டின்முற்பக்கத்தே பொருந்த அதன்மதிலுக்கு உள்ளாக ஒப்பற்ற பிள்ளையைப்போல வளர்க்க முறையேவளர்ந்து குலையிற்பொருந்திய அழகியபெரியமலர்களைக் கொய்ய வளைந்துகொடுக்கின்ற இளமையான மந்தாரவிருக்ஷமும் நிற்கும். அதனையும் பார்க்குதி எ - று.

முந்தார உள்ளாகநிற்கும் எனவும், வளைந்துகொடுக்குந் தாரு எனவும் இயைக்க. மிக அன்பாக வளர்த்தாள் என்பதுதோன்ற தனிமகப்போல் என்றான். நின்றிடும் என்பதில் இடு பகுதிப்பொருள்விகுதி. காண்டி முன்னிலை ஏவல்வினைமுற்று.

15. பொற்றாமரைவாவி.

பாரகம் - பூமியிலுள்ளோர்; ஆகுபெயர். சோபானம் - படி. தண்டு - நாளம். பிரதாபாதிகம் = பிரதாப அதிகம், வடநூன்முடிபு. பிரதாபம் - ஒளி. அதிகம் - மேன்மை.

இ - ள். நீரையுடையமேகமே! பெரியபூமியிலுள்ளாரால் புகழப்படுகின்ற என்வீட்டின்பக்கத்திலே மரகதமணிகளாலாகிய நல்லபடிகளைப் பொருந்திய வச்சிரநாளங்கள் சூழப்பெற்று ஒளியின்மேன்மையைக்கொண்ட பொற்றாமரைவாவியும் பொருந்தியிருக்கும். அதனை நீ பார். பார்த்துக் களிப்பைத்தருகின்ற நீரையடைந்து முழுகுதி. எ - று.

மிகச்சிறப்புடையவீடென்பதுதோன்றப் பாரகம்புகழ் வீடென்றான். கூடு இறந்தகாலமுற்றெச்சம். சூழ்ந்துகொள் தாமரை என இயைக்க. மேவிச்சார்ந்திருக்கும் எனமுடிக்க. உம்மை சிறப்பு. கூடுதி ஆடுதி என்பன முன்னிலையேவல் வினைமுற்றுக்கள்.

16. அன்னப்பறவைகள்.

பானம் - குடிப்பது. மேவலிலது ஆன சலம் எனப்பிரிக்க.

இ - ள். கரியமேகமே குடிக்கப்படுகின்றதாய நீரைத்தரும் அப்பொய்கையிலே துயில்கின்ற அன்னங்கள், பொருந்திய நீரைத்தருகின்ற நீ வந்தும் வேற்றுமையைப் பொருந்துகின்றிலதாகிய சலமாகியவிது நன்றென்றிருக்கும்; பக்கத்திலுள்ள மானசவாவி நீரை யடையாது. எ - று.

மழைபெய்தாலும் கலங்காத சலமுடையதென்பார் நீவந்தும் வேற்றுமைமேவலிலதான சலம் என்றார். உம்மை சிறப்பு.

17. செய்குன்று.

கனகம் - பொன். கந்தரம் - நீரைத்தரிப்பது=மேகம்.

இ - ள். சிற்றொளிபொருந்தியமேகமே! அந்தமலர்களையுடைய விசாலமாகியபொய்கையின் பக்கத்தே அழகுமிகுந்து இந்திரநீலமணியாற்செய்த குன்றொன்று பெரியபொன்னாலாகிய சிவந்ததருவாகியவாழைகளாற் சூழப்பட்டிருக்கும். அதை, உன்கருமைகண்டு தமியேன் மறவேனாயினேன் எ-று.

உன்கருமையைக் கண்டபொழுதே அது என்நினைப்பில் வந்தது. என்பான் உன்கருமைகண்டு மறவேன்என்றான். மற்று அசை.

18. அசோகும் மகிழும்.

குரவு - ஓர்மரம். அறை - வீடு.

இ - ள். மேகமே! அக்குன்றின் பக்கத்தே குராமரத்திற் படர்ந்து வீடுபோன்ற செறிந்திருக்கின்ற குருக்கத்திக் கொடியின் பக்கத்தே அசோக மரங்களும் அரும்புகளையுடைய மகிழமரங்களும் நிற்கின்றன. அவற்றுள் ஒரு தரு எனது அன்புடைய மனைவியானவள் தனது அமுதையொத்த இதழைவைத்துச் சுவைக்கும்படி நிற்கும். மற்றத்தரு அவள் காலுதையை விரும்பும். எ - று.

அசோகு சுவைக்கவும், மகிழ் உதைக்கவும் மலர்வன வாதலின் இங்ஙனம் கூறினார். மற்றது, மற்று என்னும் இடைச்சொல் லடியாகப் பிறந்த பெயர்.

19. குருவிவாச கம்பம்.

படிகம் - பளிங்கு. கனகங்கவ்வீய தூண் - பொன்னைத்தன்பாற் கொண்டதூண்.

இ - ள். மேகமே! அந்தவிரண்டு மரங்களுக்குமிடையே, மரகதமணியால் அடியைச் செவ்விதாகச் செய்யப்பட்டதும் பொருந்தத்தன்மேல்

பளிங்குக் கற்பலகையை விளங்கும்படி வைத்துச் செய்தது மாகிய செழிய ஒரு பொற்றூணனது இளமூங்கில்போல நிற்கும். அதனையும் பார்க்குதி. எ - று.

பசுமையும் வெண்மையும் பொன்னிறமுங்கலந்த தோர் ஒளி தோன்றுதலானும், செழிப்பும் பெருமையும் வலிமையுங் கொண்டு தோன்றுதலானும் இளமூங்கில் உவமையாயிற்று. காண் ஆல் விகுதிகுன்றிய முன்னிலையேவல்வினைமுற்று.

20. கம்பங்கூத்து.

கோலம் - அழகு. கங்கணம் - காப்பு. நின்தன்பன் என்றது மயிலை.

இ - ள். கார்காலத்துக்குரிய மேகமே! மாலைக்காலத்திலக்கம்பத்திலேறி மயிற்பறவை காலைத்தூக்கிவைத்து நடிக்க, என் மனைக்குரிய அன்பையுடையபெண் அழகிய கையினால் கங்கண தாளத்தையு மடித்து நிற்பாள். அப்பொழுது கார்காலத்துக்குரிய நினது நண்பனாகிய மயிலின் நடனத்தையுங்காண்குதி. எ - று.

தாளங் கொட்டும் போது காப்பு மொன்றோடொன்று தாக்கி ஒலித்தலின் கங்கணதாளமுங் கொட்டி நிற்பாள் என்றும், மேகத்தைக் கண்டால் மகிழ்தல்பற்றி மயிலை அன்பன் என்றுங் கூறினார்.

21. இயக்கன்வீடு.

குறி - அடையாளம். இருநிதி - சங்கநிதி, பதுமநிதி. வீண்படுதல் - பயனறுதல்.

இ - ள். கருமைபொருந்திய மேகமே! இக்குறிகளெல்லா வற்றையும் மனத்தில் வைத்துக் கொண்டு, இல்லையென்னாத இருநிதிகளைக் காக்குந் தேவசித்திரவடிவமைந்த வாசலிற்போய், உண்மையாக எனது பிரிவாலே ஒளி குன்றிய வீட்டையுங்காண்குதி. சூரியன்பிரிந்தால் அந்தோ! தாமரையு மொளிகுன்றுமல்லவா? எ - று.

இது வேற்றுப்பொருள்வைப்பு. அடைந்து காண் என இயைக்க. காண் விகுதிகுன்றிய முன்னிலையேவல் வினைமுற்று.

22. வீட்டுட் பிரவேசித்தல்.

களபம் - யானைக்கன்று.

இ - ள். வாயிலையடையப்பெற்று இதுதானந்தவீடென்று இக்குறிகளால் நிச்சயம்பெற்றபின்பு, அதனுட்புகும்படி ஒருயானைக்கன்றுபோலச் சிறிய வடிவைப்பொருந்தி மலையிற்றங்கி மின்மினியின் செயல்போலச் சிறிது அங்கேமின்னி அம்மின்னே கண்ணாகக்கொண்டு உள்ளே புகுவாய் எ - று.

யானைக்கன்றுக்கு மேகமுவமையாதலின், களபவடிவெனச் சிற்றுருமேவி யென்றான். இது விரோத உவமை. புகுமாறு மாறிற்று வினையெச்சம்.

23. இயக்கன் மனைவியிலக்கணம்.

கெம்பீரம் - ஆழம். கனம் - பாரம். நாபி - கொப்பூழ். தடம்-பெருமை.

இ - ள். அழகியமேகமே! இளம்பருவமுடையவள்; சிறிய இடையைத் தாங்கி முலைப்பாரத்தால் சிறிதுவளைந்தவள்; ஆழ்ந்த நாபித்தடமுடையவள்; பற்றார்ந்த நிதம்பபாரத்தால் மெல்லமெல்லப் பக்கத்தே அசைந்து செல்பவள். பிரமனது சிருட்டியிலே முதலில் நிற்பவள். எ - று.

அழகினாற், பெண்களுக்கு முன்னிற்பவள் என்பார் சிருட்டியின் முன்னிற்பவள் என்றார். இது குளகம்.

24. இதுவுமது.

அடர்த்தல் - நெருக்குதல், பொருதல்.

இ - ள். செழியமேகமே! மெல்லியமேனியையுடையவள்; வெள்ளிய முத்தைப் பொருது மிகவுஞ்சிறந்த பல்லையுடையவள்; பருவமான கொவ்வைப்பழத்தையொத்த மெல்லியவாயையுடையவள்; வெருண்ட மானின் விழி போலும் அழகிய சிலவாகிய வரிபொருந்திய கண்களையுடையவள்; பெண்களுக்கெல்லாந் தலைவியாகிய என்மனைவி. எ - று.

மாதர்க்கரசி, (உ௩-ம் செய்யுள்) வயசினள், வளைந்தவள், உடையாள், உறுவாள், நிற்பள், மேனியள், பல்லினள், வாயினள், நோக்கினள் என முடிக்க.

25. அவள்செயல்.

வாலை - இளம்பருவமுடையவள்.

இ - ள். மேகமே! பிரியாதிருந்த தமியேன் பிரிந்த பெரிய துக்கத்தால் வார்த்தைகள்பேசாமையும், உள்வீட்டி லிருத்தலும், மெல்லியபெடைபோலத் தரியாதநிலைமையுங்கொண்டவளை, இளம்பருவமுடையவளை. அடைந்த காமாக்கினியால் வெதும்புவாளை, எனது இரண்டாவது உயிரென்று எண். எ - று.

விரியாவுரையென்பது "நீங்கியபற்றுடை" என்பதுபோல நின்றது. கொண்டாளை வாலையை விரகத்தெரிவாளை எனப் பெயர்தோறும் ஐ உருபு அடுக்கிவந்தது. எரிவாள் வினையாலணையும் பெயர்.

26. நினைப்பணி.

இ - ள். சுத்தமாகியமேகமே! பிரிந்த என்னை இராப்பகலாக நினைந்து அழுது வீங்கியகண்களும், மூச்சினால் வெதும்பிய வெண்மையாகிய இதழும்,

தூங்கியகூந்தலும், கொண்டவளுடைய முகத்தினை நீ உயர்ந்து மறைக்க மறைகின்ற சந்திரனென்று உன்னுவேன். எ - று.

நீ மறைக்க மறையும் மதியென முகத்தினை உன்னுவன் என்றது தூங்கியகூந்தலால் அவள் முகம் மறைதல் பற்றி. கண்கள் களங்கத்தையும், வெள்ளுதடு வெண்ணிறத்தையும், முகம் சந்திரபிம்பத்தையுங் காட்டுதலின், உன்னுவன் என்றான்.

27. மேகம் போகும்போது அவள்நிலைமை.

உறவு - கூடவசித்தல்.

இ - ள். மின்னையும் இடியையும் கொண்ட மேகமே! நீ செல்லுகின்ற அந்தச்சமயத்திலே என்வடிவைத் தீண்டிக் கிழியில்எழுதுவாள். அல்லது தேவர்க்குக் கொடுக்கும் பலியை என் உறவை நினைத்துக் கொடுப்பாள். அல்லது பெரியகிளியோடு எனது உயிர்போன்ற தேவனை மறந்தாயோ வென்று கூறுவாள். எ - று.

அல்லது குறிப்புவினையெச்சம். ஓகாரம் வினாப்பொருட்டு.

28. வீணைவாசித்தல்.

பதம் - காலம். உளர்த்துதல் - முறுக்குதல். மயல் - மயக்கம்.

இ - ள். தலைமை பொருந்திய மேகமே! நீண்ட காலங்களோடு எனது குலச்சிறப்பை மிக்க இசையாற் பாடும்பொழுது என்னினைப்புவரப் பெருகியகண்ணீர் இடையே நரம்பை நனைக்க நனைக்க முறுக்கியும் பின் அடைந்தமயக்கத்தால் பண் தவறவும் பெறுவாள். எ - று.

கோ - விண்ணுமாம். எய்தி என்னும் வினையெச்சம் ஏதுப்பொருட்டு. ஊடும் என்பதிலும்மை அசை. ஏனைய உம்மைகள் எச்சப்பொருளன.

29. சாபமாசங்களிற் சென்றதும் நின்றதுங் காண்டல்.

இ - ள். மேகமே! அன்றுஎன்னைப் பிரிந்த நாட்டொட்டுக் கணக்கிடும் பொருட்டு ஒன்று இரண்டு என்று எண்ணி வாசற்படியிலே வைத்த ஒள்ளிய பூவினால், சென்றமாசத்தையும் நின்றமாசத்தையும் கூட்டியறிவேன் என்று அவள் கணக்கிடுவாள். ஐயகோ! இதனை நீ சிந்திக்குதி. எ - று.

அளவிடற்காய் வைத்த மலரால் கணக்கிடுவாள் என இயைக்க. ஐயகோ இரக்கக் குறிப்பு.

30. இராக்காலம்.

ஒருபடி - ஒருவாறு. தறை - நிலம். உகப்பு - மகிழ்ச்சி.

இ - ள். பகற்காலத்தை ஒருபடிகழித்து, பரந்த இராவிலே மிகவேறுபட்டு நிலமேற்கிடந்து விடியுமட்டும் மனமாகியதாமரைப்பூவிலே என்னைமறவாமல் இருப்பாள். அவ்வாறிருக்கின்றஅறைக்கருகாக (நீசென்று) எனது சுகத்தைக் கூறுகின்ற தூதுவார்த்தையைச் சொன்னாற் றிதாறுவாள் எ - று.

அகற்றி கிடந்து உறையும் என இயைக்க. உகப்பு - மகிழ்ச்சி; அது ஈண்டு ஆகுபெயராய் அதன்காரணமாய சுகத்தை உணர்த்திற்று. சுகம் - க்ஷேமம். ஓது தூது - வினைத்தொகை. ஓது என்பதை முற்றாக்கி உரைப்பினுமமையும்.

31. ஒருபாட்டிற்கிடத்தலும் உடம்பு தேய்தலும்.

உள் நீர் எனப் பிரிக்க.

இ - ள். மேகமே! உள்ளே பொருந்திய நீர் வற்றி, கிடையினாலே தேகத்தின் ஒரு புறமும் புண்ணின்றன்மையைப்பொருந்தி, ஒருகலையோடிருக்கின்ற கிழக்குத் திசையிலே தோன்றிய குளிர்ச்சிபெருந்திய சந்திரனைப்போலத் தேய்ந்த உடம்போடும், தன்னிரண்டு கண்களிலிருந்து சொரியும் நீரினால் இராக்காலத்தையுங் கழிப்பாள். அதனையுங் காண்குதி. எ - று.

வறந்து தாங்கித் தேய்ந்த உடம்பு என இயைக்க. ஓடு - வேறுவினையுடனிகழ்ச்சி. காண் - விகுதிகுன்றியமுன்னிலையேவல்வினைமுற்று. நீர் ஈண்டு அழுகையை யுணர்த்தி உபசாரமாய் நின்றது.

32. கண்களும் பார்வையில்லாமை.

வாதாயணம் - பலகணிவாயில். சீத + அமுதகிரணம்.

இ - ள். அழகியமேகமே! பலகணிவாயிலிலே முகநட்பை விரும்பி வருகின்ற சந்திரனின் குளிர்ந்த அமுதகிரணங்களைப் பார்த்து சிறிது இமைத்தலால், நீ சென்று சூரியனைமறைக்க (அதனால்) விரிவுங் குவிவுமில்லாத தாமரைப்பூவைப்போல இருப்பாள். அதனையுங் காண்குதி. எ - று.

இமைத்தல் - மூடல். காண்குதி - முன்னிலை ஏவல் வினைமுற்று. வாதாயநம் என்னும் வடமொழி திரிந்து வாதாயண மென்றாயிற்று. மறை - மூதற்குறை.

33. விப்பிரயோகம்.

கடு - கடுக்காய். கபோலம் - கதுப்பு. குந்தளம் - கூந்தல். கடுகல் - விரைதல்.

இ - ள். மேகமே! பூசாமையால் கடுவும் கைபிழியெண்ணையும் நீங்கப்பெற்றுக் கபோலம்வரைக்கும் தொடுகின்ற கூந்தல்கள் சுடுமூச்செறிதலால் அழிவுற்று அசைய (அம்மயிர்களை) ஒதுக்கிவிடுகின்ற தன்மையும் நித்திரையில்லாமையும் பின் அவள்பால் விரைந்து பொருந்தும். அதனை நீ கண்கொண்டுபார்த்துக் கிருபைகொள்ளுதி. எ - று.

எறிய காரணப்பொருட்டு. அசைந்து - செயவெனெச்சத்திரிபு. கடுகும் என்பது கடி என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம்.

34. சோகம்.

புணி - வேலை. புலர்ந்து - வாடி.

இ - ள். மேனி பசலைகொண்டு வேலையுமின்றி, நாடோறும் துன்பம் வரப்பெற்று, பலமுறை பாயிற்சென்று கிடப்பவளை, நீ எதிர்ப்படும்போது வற்றிக் கண்ணீர்நீங்கும்படி மழையைச்சொரிகுதி. நின்மனமும் இளகும். எ - று.

வீட்டுவாசலில்வந்து இருப்பதும் துன்பம்மிகப் பாயிற்கிடப்பதுமாய் இருப்பாளென்பான் பலமுறை யென்றான். தொடர்பவள் - வினையாலணையும்பெயர். இளகிடும் என்பதில் இடு பகுதிப்பொருள் விகுதி.

35. இறுகியநட்பு.

ஆதி - தொடக்கம்.

இ - ள் நீரையுடைய மேகமே! கச்சார்ந்த முலையினையுடையளாகிய என்மனைவி என்னிடத்தில் வைத்து வளர்த்த நட்பினை யார் அறிகுவர். கழிந்தநாள்களுள்ளே ஆதியிலே முன் தான் அநுபவியாத இடர்க்கடலின் மூழ்கிப் பின் அனுபவத்தையுமடைந்தாள். எல்லாவற்றையும் நேரே நீ பார்த்து இனிது தெளிகுதி. எ - று.

யாவர்என்னும் வினைப்பெயர் ஆரென்றாய் இன்மைப்பொருள் தந்து நின்றது. உம்மை முழுகுதலன்றி அனுபவமுமுற்றாள் எனநிற்றலால் இறந்தது தழீஇய எச்சவும்மை. மதி - முன்னிலையசை.

36. கிட்டும்போது அவள் இடக்கண் துடித்தல்.

அணிமை - சமீபம்.

இ - ள். ஒப்பற்ற மேகமே! அந்தோ! அணிமையிலே நீ அடையும் பொழுதில், அவளது இடக்கண் வருந்தித் துடிக்கும் சிறப்பை, வாவியிலுள்ள வலிய கயல்மீன்கள் பூங்கொத்திலார்ந்த குவளைமலர்களை அசைக்கின்ற தன்மைக்குச் சரியென்று ஐயமுங் கொள்ளுவேன். நீயும் அதனையுங் காண்குதி. எ - று.

சிறப்பினைக் கொள்கையென்று கொள்ளுவேன்; அது காண்டி என இயைக்க. காண்டி - முன்னிலையேவல் வினைமுற்று.

37. நித்திரைகொள்ளல்.

அஞ்சனம் - மை.

இ - ள். முகிலே! நீ செல்லும்போது ஒருதரம் அவள் என்னை நினைத்தலால் அலுத்து பசுமைபொருந்திய மைநீங்கிய கண்கள் துயிலப்பெறுவாளேல் யோசனைதூரத்துக்குக் கேட்கும்படி முழங்குகின்றமுழக்கு ஒன்றுமில்லாமல் குற்றமடையாதவளுடைய அருகே ஓர்சாமமளவு மிருக்குதி. எ - று.

முழங்கினால் எழும்புவள், ஆதலால் முழங்காதி என்பது கருத்து. செலும் - தொகுத்தல். வதி - விகுதிகுன்றிய முன்னிலையேவல் வினைமுற்று.

38. நித்திரையெழுப்பல்.

இ - ள். முகிலே! தனியே கிடப்பவளாகிய என்மனைவி பின்னுந் துயில்கொண்டால் சிறிது உன்னுடைய குளிர்ச்சிபொருந்திய துளியும் குளிர் காற்றும் மேனியிற்படச், சொரிந்து கோபியாதெழுப்புதி. பின் மின்னலை விடுத்து முழக்கமாகிய ஒலியே மொழியாகக்கொண்டு நல்வார்த்தையுஞ் சொல்லுதி. எ - று.

விடுத்து எழுப்புதி என இயைக்க.

39. அவளோடு பேசும்விதம்.

மன்மம் - இரகசியம். மர்மம் என்னும் வடமொழித்திரிபு.

இ - ள். சுமங்கலியே! உனது உயர்ந்த நண்பனுக்கு நானும் நண்பன். உனது மங்கலத்தை விரும்பி, உனக்கு அவன்வார்த்தையைச் சொல்லவும் வந்தேன். பிறப்பிலே என்னை மேகமென்றறிகுதி. மனைவியர்களிடத்து இரகசியங்களை நீங்கினவர்களை முழங்கி வருவிப்பேன். எ - று.

மங்களம் - சுகம். வருவிப்பன் - பிறவினை.

40. வார்த்தை கேட்கும்போது அவள்பார்த்தல்.

சுக + ஆதி.

இ - ள். நீரையுடையமேகமே! என்றுசொல்லுதி. அப்போது அவளும் ஸ்ரீராமபிரான் மனைவியாகிய சீதை தூதிலே அனுமனைக் கண்டதுபோல, உன் அழகிய வடிவைநோக்கி மனஞ்சிறிதாறி, உபசரித்து நின்று எனது சுகாதிகளை வினவுவாள். எ - று.

ஏ - அசை மேற்செய்யுளிலுள்ள வருவிப்பேன் என்பதை இதனுள் என்று சொல்லுதி என்பதனோடு முடிக்க.

41. சுகமோடுவேனெனல்.

சடிதி - விரைவு.

இ - ள். முகிலே! தென்றிசையிற் பொருந்திய சித்திரகூடமென்னுஞ் செழியமலையிலே உனது ஒப்பற்ற நாயகன் உயிரோடிருந்து என்னை உன்னிடத்திற் போய்த் தன்னியல்பைச் சொன்னபின்பு, உன்சுகத்தைக் கேட்டுச் சடுதியில் வருகுதி என்றான் என்றும் அவளுக்குச் சொல். எ - று.

பரிதபித்து என்பது பரிதாபம் என்னும் வடசொல்லடியாகப் பிறந்த வினையெச்சம்.

41. இருவர்மேனியும் ஒருவிதப்படுதல்.

இ - ள். மேகமே! தீயூழினாலே மிக்க தூரத்திலிருக்கும் உன்னுயகனும், வரும்வழியில்லாமையால் பெருமூச்சுவிட்டுச் செயல்குன்றிப் பலவகை நோய்கொண்டு கண்ணீர்சொரிந்து பரிதாபமுற்றுப் பழையவலி குறைந்து உன்னைப்போல மெலிந்துளன் என்றும் சொல்லுதி. எ - று.

செல்லுதல் - வருதல். வழுவமைதி. "தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந் - தன்மை முன்னிலை யாயீ ரிடத்த" என்றாராதலின். உளன் குறிப்பு வினைமுற்று.

42. சொல்லியவண்ணஞ் சொல்லுதல்.

இ - ள். பெண்ணே! உன்நாயகன் சத்தமிட்டு மிக எடுத்துச் சொன்னாலும் நின்செவி எங்ஙனம் ஆராய்ந்தறியும். ஏனெனில், அவன் போதற்கரிய தூரத்திலேயிருக்கின்றானாதலின். அவன் ஆலோசித்து சொல்லியபடி தவறாது சொல்வேன். கேட்குதி. எ - று.

தவறாது சொல்லுவேன் என இயைக்க.

44. மனைவியைமுன்னிலையாக்கிச் சொன்னது.

இ - ள். சண்டீ! உன்மேனியைப் பலினிக்கொடியிலே பார்த்தறிந்தேன்; உன்கண்களை வெருண்டு செல்லுகின்ற மான்களின் கண்ணிற் கண்டேன்; முகத்தைப் பூரணசந்திரனிடத்திற் பொருந்த வைத்தறிந்தேன்; குழலை மயிற்பீலிகொண்டும், புருவத்தைத் திரைகொண்டுமறிந்தேன்; உனக்குப் பூமியில் ஒப்புச்சொல்லத் தகுந்தோர் யாவர்? எ - று.

வினாப்பெயர் இன்மைகுறித்து நின்றது. சண்டம் - கோபம். எனவே சண்டீ என்பது சுரதலீலையின் பொருட்டு வெறுப்பவள் என்பது பொருள். உரைப்பவர் - செயப்பாட்டு வினைப்பெயர்.

45. சித்திரந் தீட்டல்.

இ - ள். கூரிய நஞ்சுபொருந்திய வேல்போலும் கண்களையுடைய பெண்ணே! உன்வடிவைக் கற்பொடிகொண்டு கல்லாகிய படத்திலெழுதி வணங்கப்புகுந்த என்னை எனதுகண்கள் அடிக்கடி நீரைச் சொரிந்து பார்வையைமறைக்கும். ஐயோ! பாவியாகிய எனக்குப் படத்திலுமுன்னைப் பரிசிக்கவும் நல்விதியில்லைப்போலும். எ - று.

உம்மை - இழிவுசிறப்பு. எச்சமுமாம். ஏ. அசை.

46. தலதேவதைகளும் பரிந்து கண்ணீர்விடுதல்.

பண் - அழகு. பரிதல் - வருந்தல்.

இ - ள். பூமியில் விளங்குகின்ற பெண்களுக்கரசே! கனவில் வருகின்ற உன்னுடைய அழகுமிக்க உருவெளியைக் கண்டு வருகுதி யென்று கையை நீட்டி வருந்திய என்னைக் கண்ணால் மிகநோக்கித் தலதேவதைகள் தமதுகண்களினின்றும்விட்ட நீர் ஆகாயத்திலுயர்ந்த தருக்களின் செந்தளிரின்மீது விழுகின்றது. எ - று.

47. அவளுருப்பரிசித்ததென்று அவ்வாயுவைப் பரிசித்தல்.

விதி - ஊழ். பதி - நகரம்.

இ - ள். விதிசெலுத்த இங்கே வந்த தனியேனுக்கு இனிமை மிகுகின்ற சுகுணவதியே! பரிமளத்தைத் தருகின்ற வாயுவானது நகரையடைந்து அங்குள்ள சாளமரத்திலுள்ள தளிர்களைஉடைத்தும், அதன்பாலை உட்கொண்டும், தென்றிசை நோக்கிவரத் திதியையொத்த நின்வடிவைத் தீண்டிய காற்றென்று தீண்டுவன். எ - று.

படத்தீண்டுவன் என்க. உன்னைத் தீண்டாதொழியினும் உன்னைத் தீண்டிய காற்றையாதல் தீண்டித் தன் சோகம் தணிவன் என்றபடி.

48. இராவும்பகலும் சோகமெனல்.

இ - ள். நிறைவுபெறாத அமுதமே! திருவே! வருகுதி. நின்னைப் பிரிதலாலே ஆற்றுதற்கு முடியாததாய் என்னை விட்டுநீங்காத விரகநோயால் இராக்காலம் மிகநீட்டிக்கும். அதுவிடிவதில்லை. இனிப் பகற்காலமும், சூரியனுடைய வெய்யிலினாலே துன்பமிகும். இப்படிஎனக்கு இருகாலத்தும் துன்பம் அதிகரித்தன. எ - று.

ஆற்று - முதனிலைத்தொழிற்பெயர்.

49. உயிர்தாங்கியவருமை.

இ - ள். பெண்களுட்சிறந்தவளே! உண்மையாக என்சாபம் நீங்கியபின், மேலான பலகருமங்களைச் செய்வேன் என்று இவ்வளவுநாளும் என் உயிரைத் தாங்கியிருந்தேன். இன்பதுன்பங்கள் ஒருவனுக்கு அழகிய தேரின் உருள்போல மாறிமாறிவரும் இயல்பினைத் தெளிகுவாய். எ - று.

எனவே, என் துன்பமும் நில்லாது என்றுகூறினானாயிற்று.

50. சாபநீங்குநாள்.

இ - ள். சேஷசயனத்திலிருக்கின்ற திருமால் அச்சயனத்தைவிட்டுத் துயிலெழும் நாளில் என்சாபமும்நீங்கும். கழியாதெஞ்சிய நாள்களைக் கண்ணை மூடிக் கொண்டு ஒருவாறுநீக்குதி. சாபம்நீங்கியவுடன் நானும் வந்து கூடுவேன். கூதிர்ப்பருவமும் எங்களையடையும். எ - று.

வருந்தாது இருந்து கழிக்குதி என்பான் கண்மூடி யென்றான். திருமால் துயிலெழுநாள் - மார்கழிமாசத்து வைகுண்டஏகாதசி.

சாபமும் என்பதிலும்மை துயரமும் நீங்கிடும் என்பதை உணர்த்தும்; எச்சம். மற்றைய உம்மை சிறப்பு.

51. வேறடையாளம்.

இ - ள். மேகமே! என்பதை அவளுக்குச் சொல்லுதி. இன்னும் அன்று ஒருநாளில், குளிர்ந்த சயனத்திலே இன்போடு இருக்கும்பொழுது நீ துன்பத்தோடு அழுததும், என்னென்று யான் அன்போடு கேட்பக் கனவின்கண்ணே நீ அயலாளைச்சேரத் துன்பத்தோடும் கண்டதுண்டு. (அதனால் அழுதேன்) என்றுசொன்னதும் என்நெஞ்சில் உண்டென்று சொல்லுதி. எ - று.

அழுததும் என்றதும் உண்டெனச்சொல் என இயைக்க. என்றது வினையாலணையும்பெயர்.

52 உலகப்பேச்சைநம்பாதேயெனல்.

இ - ள், பெண்ணே! உண்மையாக யான் சொல்லும் இவ்வடையாளத்தை உபாயத்தோடும் நினைத்துச் சந்தேகமின்றிச் சுகத்தோடு உள்ளேன் என்று அறிவாய். பூமியிலுள்ளவர் (என்னைக்குறித்து) யாதேனுஞ் சொல்வார். அதனைமெய்யென்று கொள்ளற்க, என்று சொன்னேன் என்றும் மேகமே! நீ சொல். எ - று.

விடுதல் - சொல்லுதல். விடு - விகுதிகுன்றிய முதனிலைத் தொழிற் பெயர்.

53. முடிந்ததுமுடித்தல்.

சீலம் - ஒழுக்கம். திருந்துதல் - தேறுதல். குறி - அடையாளம்.

இ - ள், கரியமேகமே! யான்சொல்லியவற்றையெல்லாஞ் சொல்லி, பின், ஒழுக்கமுடையவளும், கற்பினையுடைய அருந்ததியையொத்தவளுமாகிய என்மனைவியைத் தேற்றித் தேற்றியஅவள்பால்இருந்து ஓரடையாளம் வாங்கிக்கொண்டு, கயிலாயமலையிற்படிந்து தங்கிக் காலையிலேவந்து என்னுயிரையுங் காப்பாய், எ - று.

சொல்லி தேற்றி படிந்து தங்கி வந்து காக்குவை எனமுடிக்க. அவள் செய்தி அறியாவிடின் நான் இறந்துவிடுவேன் என்பான் உயிரையுங் காக்குவை என்றான்.

54. மேகத்தின்சம்மதமறிந்தது.

சாதகம் - வானம்பாடிப்புள். தனிதம் - ஒலி.

இ- ள். மேகமே! சாதகப்பறவையுண்ணும்படி தண்ணீரைக் கொடுத்து ஒலியின்றி நீ தயவுடையவனாக இருத்தலினால், என்னினைப்பையும், வேறுபாடின்றி முடிக்குவாயென்று பெரிதுமறிந்தேன். மேலோர்கண் ஒன்றை வினவ அவர்செயலே அதற்கு விடையாகும். எ - று.

என்றது என்வினவுக்கும் உன்செயலே விடையாம் என்றபடி.

55. முகிலுக்கு விடைகொடுத்தல்.

இ - ள். விண்ணிலுள்ளமேகமே! என்செயலை அறிகுவாயன்றோ! வானவில்லை மேலே தோற்றுவிக்கின்ற கார்காலமேகத்தையொத்த உனது விருப்புப்பொருந்த என்மேலே தயைசெய்து என்தூதுவார்த்தையை அங்கே சொல்லியபின் மேலே உன்விருப்பப்படி செல்லுக. இவ்வுதவியால் நீயும் மின்னென்கின்ற நினது மனைவியோடும் பிரியாதிருப்பாயாக. எ - று.

பிரியல் வியங்கோள் வினைமுற்று. ஐ சாரியை. பிரியலை என்பது பிரியாதே எனப்பொருள்கொள்ளில் முன்னிலை ஏவன்முற்றாகும்.

NOTES

Stanza 1. Chitrakuta is a mountain in Bundelkhand, now known by the name of Comptah and is still a place of sanctity and pilgrimage. The view is also held by some scholars that the mountain referred to in the original poem is the modern Ramtek near Nagpur.

The Yaksha whose duty it was to bring lotuses to Kuvera every morning for the worship of Siva, unwilling to leave his wife early in the morning brought on one occasion the lotuses required for the next day's puja in the previous night. Kuvera while performing the Siva-puja was stung in the finger by a bee hidden in one of the flowers. He therefore sentenced the servant to undergo one year's exile. This is one account of how the Yaksha got this சாபம்.

Stanza 8. Alaka is the capital of Kuvera and the residence of his dependent duties.

10. The chataka is a bird supposed to drink no water but rain-water.

12. Kailasa is a mythological mountain; but the name is also applied to the lofty range that runs parallel to the Himalayas on the north of the chain. The lake Manasa lies between the two ranges; and it is quite true that it is the especial resort of the wild grey goose at the beginning of the rainy season.

15. The geographical part of the poem now begins, and it seems to be very accurately conceived.

The siddhas (சித்தர்) are originally human beings but who by devout meditation have attained superhuman powers and a position intermediate between men and gods. They inhabit the upper regions of the air.

திசையானை: Each of the eight points of the compass has according to the Hindus, a regent or presiding deity. Each of these deities also has his male and female elephant.

St. 16. It was necessary for the cloud to begin the journey by moving towards the east in order to get round the lofty hills.

Indra's bow is the rainbow.

St. 18. Amrakuta is the modern Amarkantaka from which the river Narmada rises, and which forms the eastern part

of the Vindhya mountains. The term Amarakuta means the Mango Peak and refers to the abundance of mango trees in its slopes.

St. 23. விதிசை is the modern Bhilsa in the province of Malva. It is situated on the river Vetravati.

St. 24. The வேத்திரவதி is the modern Betwa. It rises on the north side of the Vindhya chain and pursuing a N. E. course of 340 miles through Malva falls into the Jumna.

நீசைமலை; May signify either the hill named நீசை or a hill of little elevation.

மலர்கொய்யு நாரியர்; The use of garlands in the decoration of the houses and temples of the Hindus, and of flowers in their offerings and festivals, furnishes employment to a particular caste, the Malakaras (மாலாக்காரர்) or wreath-makers. The females of this class are here referred to.

St. 26. அவந்திநகரை: Avunti is the name of a country, North of the Narmada. Its capital was Ujjayini (or the modern Ujjein) also called Avanti or Avantipuree and Visala situated on the Sipra. It is the Western part of Malva. Here was the famous court of the King Vikramaditya whose court-poet was Kalidasa. The poet on account of his partiality for the place makes the cloud take a circuitous path, in order that he might have an opportunity of describing its beauties.

St. 27. நிருவிந்தியை: is one of many streams that flow from the Vindhyas between the Parbaty and the Sipra.

St. 29. The synonyms of Ujjein are here enumerated; உஞ்சை (Ujjeiny), விசாலை (Visala) அவந்தி (Avanti) and Pushpakarandini.

St. 30. The story of Udayana or Vassaraja as he is also named is thus told:—Chundamahasena was a sovereign of Ujjayini, who had a daughter named Vasavapatta whom he intended to give in marriage to a King named Sanjaya. In the meantime the Princess sees the figure of Vassaraja in a dream and becomes enamoured of him. She contrives to inform him of her love, and he carries her off from her father and his rival. In some account of this story the name of the King of Ujjeiny or Avanti is given as Pradyota. But Pradyota was the King of Magadha who had a daughter named Padmavati whom King Vatsa married as his second wife.

St. 31. கமலபரிமள:—Rendered fragrant by contact with the exquisite smell of the lotus, நீரா =growing in the water.

மாநதி: Great river. The river alluded to here is the Sipra on which Avanti (Ujjeini) is situated.

St. 34. Mahakala is the name of God Siva's shrine or temple situated at Ujjeiny one of the 12 Jyotirlingam.

கேத்திரம் Temple, shrine.

St. 42. கம்பீரை: This is one of the many streams found in Malva.

St. 43. தேவகிரி is a mountain situated South of the river Chambol in the middle of the province of Malva and exactly in the line of the Cloud's path. This hill is the site of a temple of God skanda.

St. 46. The modern name of சர்மவதி is the Chambal.

St. 47. Rantideva was the King of Dasapura, son of Sankriti and sixth in descent from Bharata. He is mentioned as a very pious and religious King. He was charitable and profuse in performing sacrifices.

St. 48. வசுதேவர்பாலகன்—Lord Krishna. வசுதேவர்பாலகன் போலக்கறுத்த Being of the same dark blue colour as Krishna.

St. 49. தசபுர was the capital of King Rantideva. It corresponds to the modern *Dasor* in Scindia's dominions in the Western Malva division of central India.

St. 50. பிரமாவர்த்தம் is the holy land of the Hindus—a tract of land lying between the two rivers Saraswati and Drishadvati (northwest of Hastinapura.

குருக்கேத்திரம்,—the Field of the Kurus, was the scene of the famous battle between Kauravas and Pandavas. It lies a little to the southeast of modern Thaneswara.

St. 51. சரசோநதி—Saradwati river. The Saraswati falls from the southern portion of the Himalayas and flows into the great desert where it is lost in the sand. It flows a little to the northwest of குருகேத்திரம்.

St. 53. சானவி—daughter of Jahn. Janhu is the name of a sage who, on being disturbed by the passage of the river (Ganges), drank up its waters. He afterwards allowed the river to re-issue from his ear. Hence the relation of the Ganges to the saint as his daughter.

The Ganges was brought from heaven by the austere religious rites of பகீரதன் (Bhagiratha) the great grandson of Sagara, to wash the ashes of Sagara's 60000 sons and procure them admission to heaven. Hence the name பாகீரதி of the river Ganges.

St. 54. பிரயாகை (Prayaga) is the modern Allahabad.

St. 55. கனகல is the place where the Ganges descends into the low ground of Hindustan. It is still a place of note and holiness.

St 57. சரபம் is a fabulous bird with 8 legs and of a fierce untractable nature. It is supposed to be stronger than a lion.

The poet very appropriately makes mention of the hail-stones (கன்மழை) here. The cloud is moving in a very cold region aud its minute water particles are at once changed into hailstones.

St. 58. கன்மேல்—பாதம். The place mentioned here may refer to the neighbouring hill at Haridwara known as "Haraka Pairi" the foot of Hara or Siva.

St. 60. The Krauncha is a pass somewhere in the Himalayas.

St. 61. Kailasa as it appears here is a part of the Himalayan Range.

அரக்கன்—Ravana. The allusion is to Ravan's attempt at removing the Mount Kailash from its site. His attempts were unsuccessful.

St. 64. கோடு—Sharp point. யந்திரதாரைக் கருகத்தடைத்து வைப்பார்=They will detain you to do the office of a shower-bath.

St. 65. மானசவாவி (மானசரோவரம்) is a celebrated lake situated in the centre of the Himalaya Mountains and was said to be the source of the Ganges and the Brahmaputra.

St. 66. The geographical part of the poem stops here which is highly creditable to the poet's accuracy. We now come to the region of fable, the residence of Kuvera and his attendant demigods.

9446

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வகை நிரல் எண்
73
பதிவு இல.
17. 5. 1950
14905
7. 6. 1958